PROTONTECH




175, Main Street
Trincomalee
075 6602486

அரைவு 02 இயம் 38 May 24 - 30, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

Banking Studies
IABF - DABF
@
Veal Business College

## சிங்கள குடும்பத்தின் பொங்கலுக்கும் 'ஆப்பு'

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் கடந்த 18ம் திகதி தமது நேர்திக் கடனைச் செலுத்தப் பொங்கல் செய்த சிங்களக் குடும்பம் அரை அவியலுடன் பொங்கல் பானையைக் கொண்டோட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமது நேர்த்திக் கடனை தீர்ப்பதற்காக குறித்த திகதியில் காலை 7 மணியளவில் மூன்று பானைகளில் பொங்கலை ஆரம்பித்திருந்த அக்குடும்பத்தினர் முதலாவது பொங்கலை முடித்திருந்த வேளை பொங்கல் தகவலைப் பெற்றுக்கொண்ட இராணுவத்தினர் அங்குச் சென்று பொங்கலை உடனடியாக.....

13

## 'அரோகரா' செய்தியால் பரபரப்பு

மதகுரு ஒருவரின் கைத்தொலைபேசியில் இருந்து அனுப்பப்பட்ட 'அரோகரா' செய்தியால் சைவ மற்றும் கிறிஸ்தவ மக்கள் மன உளைச்சலுக்கான சம்பவம் ஒன்று கிழக்கின் பெரிய கல்லாறு பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

பெரிய கல்லாறில் அமைந்துள்ள கடல் நாச்சியம்மன் கோவிலின் திருச்சடங்கு சிறப்பாக நடைபெற்றுள்ளது. அச்சடங்கில் மதபேதமின்றி கிராம மக்கள் அனைவரும் கலந்துகொள்வது வழமையாகும். இம் முறையும் அவ்வாறு மக்கள் கலந்துகொண்ட வேளையில் அம் மக்களில் கிறிஸ்தவ மக்களுக்கு

13

## "விதவைகளுக்கு டி.ஆர்.சி உதவி"

குடும்பங்களின் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை திருகோணமலை மாவட்ட டெனிஸ் அகதிகளுக்கான அமைப்பு வழங்கியுள்ளது.

மூதூர் பிரதேசச் செயலாளர் திரு. பிரதீபனின் அனுமதியுடன் இவ்வாழ்வாதார உதவிகளை வழங்கும் நடவடிக்கையினை டி.ஆர்.சி அமைப்பின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் நிரோசன் முன்னெடுத்துள்ளார்.

மூதூர் பாரதிபுரம் கிராமத்தில் இயங்கும் பாரதி விதவைகள் சங்கத்தினரின் அயராத.....

13

# கிழக்கு மாகாணசபை அதிகாரங்களை மத்திய அரசிடம் கையளிக்க வேண்டாம்


## இரா.துரைரட்ணம் கோரிக்கை

13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கென வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மத்திய அரசு கையகப்படுத்த கிழக்கு மாகாண சபை அனுமதிக்கக்கூடாது என தெரிவித்துள்ள கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம், ஆளுனர்களுக்கான அதிகூடிய அதிகாரங்களும் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் கிழக்கு மாகாணசபை முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள பகிரங்க மடலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

13

## ஐநா தீர்மானம் தொடர்பாகக் கிழக்கில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் - த.தே.கூ



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கவும், அது தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்குமான கூட்டங்கள் கிழக்கில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா பா.உ. தெரிவித்தார்.

எதிர்வரும் 30ம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பிலும், 31ம் திகதி சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்திலும், அக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

13

## இலங்கைத் தமிழரை வேட்டையாடும் மலேசிய காவல்துறை – "சூரம்" அமைப்பு

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் மலேசிய காவல்துறையினர் இலங்கை அகதிகளை வேட்டையாடுவதாக மலேசியாவின் உள்ளூர் மனித உரிமைகள் அமைப்பு ஒன்று குற்றம் சுமத்தியுள்ளது



மலேசிய பொலிஸார், நாட்டின் அதிகாரம் மிக்க அரசியல்வாதிகளின் உத்தரவுகளுக்கு ஏற்ப செயற்படுவதாக சூரம் என்ற அமைப்பின் பேச்சாளர் ஆர் தேவராஜன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மலேசிய அதிகாரிகளால் கடந்த வியாழக்கிழ்மையன்று மூன்று இலங்கைத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

13

## "மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளரை விலக்கிக் கொள்ளுங்கள்" தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

ஒழுக்காற்று விசாரணைகளுக்காக சம்மாந்துறை வலயக் கல்விப் ப்ணிமனையில் இருந்து இடமாற்றப்பட்ட முஸ்லிம் கல்விப் பணிப்பாளரை விசாரணைகள் எவற்றையும் மேற்கொள்ளாது மூதூர் கல்வி வலயத்திற்கு நியமனஞ் செய்தது எவ்விதத்தில் தகும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணச் செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் படி, மூதூர்க் கல்வி வலயம் 81 பாடசாலைகளைக் கொண்ட வலயமாகும். அதில் 01 சிங்களப் பாடசாலை உள்ளடங்களாக, 50 தமிழ்ப் பாடசாலைகளும், 30 முஸ்லீம் பாடசாலைகளும், அடங்குகின்றன. கடந்த யுத்த காலங்களில் மிக..........

13

English O/L Paper Classes

for
Repeaters
&
Studying Students

@
Veal Business College

026- 2227622 - 077 02 03 201

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042

## அதிகாரங்களை விட்டுக்கொடுத்து கதிரைகளைத் தக்க வைத்தல்

தோற்பதால் வாழ்வதை விட வெல்வதால் சாவதே மேல் என்றோர் வாக்கினை எமது ஆரம்ப காலத்தில் நம்மிற் சிலர் கேட்டிருக்கும் வாய்ப்பு இருந்தது.

அக்காலத்தில் அதனைச் சத்திரியத்தனம் என சொல்லக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் காலவோட்டத்தில் உலகப் பொருளாதார அமைப்புக்களின் மாற்றத்தில் உண்மையிலேயே சத்திரியத்தனம் தோற்றுப் போனது. உண்மையும் நியாயமும் எங்கிருக்கின்றனவோ அங்கு வெற்றி நிச்சயம் என்ற வார்த்தைகள் புத்தகங்களிலும் மக்கிப் போகத் தொடங்கிய போது தான் சாணக்கியத்தனம் என்னும் வார்த்தை சற்று முன்நகர்ந்தது.

வளைந்து நெளிந்தேனும் எமது காரியத்தை முடித்துக்கொள்ளுதலை நாம் சாணக்கியத்தனம் என இலகு தமிழில் வரையறுக்கலாம்.

இங்கு 'எமது' என்னும் வார்த்தைதான் பெரும் கேள்விக்குறியாகி இன்று நிற்கின்றது.

எமது என்பது ஒரு தனிமனிதனுக்கும் அரசியல் தலைவனுக்கும் இடையே பெரும் வேறுபாட்டை உருவாக்கி விடுகின்றது.

ஒரு தனிமனிதன் 'எனது' என்னும் வார்த்தையைத் தனது குடும்பத்துடன் வரையறுத்துக் கொள்கின்றான். அத்துடன் தனது தனிப்பட்ட நன்மைகளைக் குறியாகக் கொள்ளத்தக்கவகையில் அவ்வார்த்தையைப் பிரயோகிக்கின்றான்.

ஆனால் ஒரு அரசியல் தலைவனோ 'எனது' என்னும் வார்த்தையை பயன்படுத்தும் போது பரந்துபட்ட அளவில் அவ் வார்த்தை அர்த்தப்படுகின்றது.

எனது என அவ்வரசியல் தலைவன் குறிப்பது அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களை, பிரதேசத்தை, இனத்தைக் குறிக்கின்றது.

எனவே ஒரு அரசியல் தலைவனின் 'எனது' என்னும் அணுகுமுறையானது அவனது தனிப்பட்ட நலனை விடுத்து தான் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்களை, இனத்தை, பிரதேசத்தின் நலனைக் குறியாகக் கொண்டு அமைந்து விடும்.

ஆனால் இலங்கையில் விசேடமாகக் கிழக்கில் அதிகாரங்களில் இருப்பவர்களும் அரசியல் தலைவர்களும் 'எனது' என்னும் வாத்தையைத் தப்பாக விளங்கிக்கொண்டு இருகின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தலைவர்களாக இருந்தாலும் தனிப்பட்ட மனிதனின் 'எனது' என்ற சிந்தனையை அவர்கள் கொண்டிருப்பது தெரிகின்றது.

அவர்களது சாணக்கியத்தனம் எல்லாம் தாம் இருக்கும் கதிரையைத் தக்கவைப்பதற்காக அரசியல் தலைவனுக்குரிய 'தனது' என்ற வார்த்தையை அடைமானம் வைப்பதனை அவர்கள் மேற்கொள்கின்றார்கள்.

கிழக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங்களை மத்திய அரசிற்கு விட்டுக் கொடுத்து தமது கதிரைகளை தக்கவைத்துக்கொள்ள நடக்கும் போட்டியில் ஒட்டுமொத்தக் கிழக்கு மாகாண உரிமைகளும் அடைமானம் வைக்கப்படுகின்றன என்பதை அறிய முடிகின்றது.

கிழக்கில் அதிகாரப் பகிர்வுக்கான அலகாக காணப்படும் மாகாண அரசாங்கம் தனக்கு சில அதிகாரங்கள் தேவையில்லை என விட்டுக்கொடுப்பது ஏன்? என்ற கேள்வியுடன் மாகாண அரசிற்கே அது தேவையில்லையாயின் மத்திய அரசிற்கு அவ் அதிகாரம் ஏன் தேவைப்படுகின்றது என்ற கேள்வியும் சேர்ந்து எழும்புகின்றது.

எதிர்கட்சியினரோ அறிக்கைவிடுவதுடன் தமது கடமைகள் நிறைவு பெற்றுவிட்டதாக அமைதி காக்கின்றார்கள். அவர்களும் 'எனது' என்ற குறிக்கோளை மிகச் சரியாகப் புரிந்திருப்பதும் தெரிகின்றது. வெளிநாட்டின் உதவிகளை உள்நாட்டில் பகிர்வதே தமது தலையாய கடமையாக அவர்கள் முன்செல்கின்றனர்.

கதிரைகளைத் தக்க வைக்க வேண்டுமானால் உரிமைகளை அடைவு வைப்பது என்ற புனிதச் செயற்பாடு தொடரும் வரைக்கும், அதனை மக்கள் அனுமதிக்கும் வரைக்கும் எழுத்தறிவு வீதம் 90ற்கு மேல் இருந்தாலும் நாங்கள் மேய்க்கப்படக் கூடியவர்கள் என்பது தெளிவு.

## பொதுப் பேருந்து மீது மன்னம்பிட்டியில் தாக்குதல்

அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துசபைக்கு சொந்தமான பேருந்தில் பயணம் செய்தவர்கள் மீது மன்னம்பிட்டியில் வைத்து பெரும்பான்மை யினத்தவர்களினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 9.30மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி தகவல்கள் தெரிவித்தன.

விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த சனி இரவு அக்கரைப்பற்றில் இருந்து மட்டக்களப்பு ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்தின் மீது மன்னம்பிட்டியில் வைத்து ஒருவர் கற்களினால் தாக்குதல் நடத்தி அதன் கண்ணாடிகளை உடைத்துள்ளார்.

இதன்போது பஸ்ஸின் நடத்துனருடன் பொதுமக்களும் இணைந்து குறித்த நபரை பிடித்து தாக்கியுள்ளனர்.இந்தவேளையில் அப்பகுதியில் ஒன்றுகூடிய 25க்கும் மேற்பட்ட பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் குறித்த பேருந்தில் பயணம் செய்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் சிலர் அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் குறித்த பேருந்தில் பயணம் செய்தவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் இத்தாக்குதல் தொடர்பில் கதுறுவெல காவல்துறையில் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிண்ணியாச் சிறுவன் புத்தளத்தில் நிர்க்கதி?



புத்தளத்தில் நிர்க்கதியாகவுள்ள சிறுவன் ஒருவன் தான் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்தவன் எனத் தெரிவித்துள்ளான்.

கடந்த 16ம் திகதி புத்தளம் பெரிய பள்ளிவாயலுக்கு அருகாமையில் தனியாகத் திரிந்த இச்சிறுவனிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது பின்வரும் தகவல்கள் அவரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

தனது பெயர் முஹம்மது சாபிர் எனவும் தனது தகப்பனின் பெயர் லுக்மான் எனவும், தாய் காலமாகி விட்டார் என்றும் தான் ஆண்டு 4ல் கல்வி கற்பதாகவும் தெரிவித்த அவர் தனது பாடசாலையின் பெயர் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்

இச்சிறுவனை கடந்த 21ம் திகதியன்று கற்பிட்டியில் இருந்து வருகை தந்த உறவினர்கள் தம்முடன் அழைத்துச் சென்றுள்ளதாக கிண்ணியா.நெட் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இச்சிறுவன் தொடர்பாக யாரும் அறிந்திருப்பின் 032-22267451 என்ற இலக்கத்துடனோ அல்லது 0772226111 என்ற கைத்தொலைபேசிக்கோ தொடர்பை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## காவல்துறைக் கண்காணிப்பில் கொல்லப்படுவோர் அதிகரிப்பு



காவல்துறையினரின் கண்காணிப்பில் கொல்லப்படும் சந்தேகநபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஆசிய மனிதவுரிமைச் சபை அறிக்கையிட்டுள்ளது.


அண்மையில் 17 வயதுடைய சந்தேக நபர் காவல்துறையினரின் தடையில் இருந்த வேளை மரணமானதைத் தொடர்ந்து ஆசிய மனித உரிமைச் சபை மக்களினதும் பொது அமைப்புக்களினதும் தலையீட்டை இவ்விடயத்தில் கோரியுள்ளது.

காவல்துறையின் கண்காணிப்பில் கடுமையாகத் தாக்குதலுக்குள்ளான 17 வயதான சதுன் மாலிங்க இரண்டு நாட்களில் மரணத்தைத் தழுவியுள்ளனர். அதனையடுத்தே இவ்அறிக்கை வெளியாகியுள்ளது.

இவ்அறிக்கையில் காவல்துறையினரின் தாக்குதலில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த சதுன் தன்னை வைத்தியரின் கவனிப்புக்கு உட்படுத்துமாறு காவல்துறையினரிடமும், அடுத்து நீதிபதியிடமும் பின்னர் சிறைச்சாலை அதிகாரிகளிடமும் வேண்டுகொள் விடுத்திருந்தார் எனவும் அவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அவரது வேண்டுகோளை நிராகரிதிருந்ததுடன் சதுனின் பெற்றோர்களின் வேண்டுகோளையும் நிராகரித்திருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியில் மரணத்தைத் தழுவிய சதுனின் பிரேத பரி சோதனை அறிக்கையானது உள்ளக இரத்தக் கசிவாலே மரணம் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருப்பதால் காவல்துறை, குறித்த நீதிபதி மற்றும் சிறைத் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவ்வறிக்கை பரிந்துரை செய்துள்ளது.

(முழு அறிக்கை www.tbn.asia வில்)

## சொகுசு வண்டி குடை சாய்ந்து நால்வர் காயம்



கடந்த 19ம் திகதி இரவு திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த சொகுசு வண்டியொன்று மூதூர் பிரதேசத்திலுள்ள வாய்க்கால் ஒன்றில் குடைசாய்ந்ததில் நால்வர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த நால்வரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரச சேவைகள் ஐக்கிய தாதிமார் சங்கத்தின் கிழக்கு மாகாண அமைப்பாளர் என்.சசிகரன், மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள பிரதி பணிப்பாளர் இரா.ஹரிகரன் மற்றும் சட்டத்தரணி ஆரியசிவம் உட்பட நால்வர் இந்த விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த தாதியர் சங்க கிழக்கு மாகாண அமைப்பாளருக்கும், மற்றுமொரு தாதிய உத்தியோகத்தருக்கும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காயமடைந்த அனைவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்தனர்

## நகை மோசடி - பெண்ணுக்கு விளக்கமறியல்

திருகோணமலை, கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பகுதியில் சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை மோசடி செய்த பெண்ணொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பெண் திருகோணமலை பதில் நீதவான் திருசெந்தில்நாதன் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா காவல்துறைக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான பெண், நான்கு பேரிடம் நகை மோசடி செய்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிண்ணியா காவல்துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## நாற்பது ஆசிரியருக்கு கிழக்கில் நியமனம்

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை மீள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, 40 புதிய ஆசிரியர்களுக்கு கடந்த [illegible] நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.நிசாம் தெரிவித்தார்.

திருகோணமலை கல்வி அபிவிருத்தி முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நியமனம் வழங்கும் வைபவம் இடம்பெற்றுள்ளது.

நிபந்தனை அடிப்படையில் புதிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாகாண கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து ஆண்டுகளின் முடிவில் உலகின் அதிர்வுகள்

**வாராந்த அலசல்**

செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்

## வெள்ளைக்கொடி வழக்கில் புதிய தடயங்கள் - யஸ்மின் சூகா -



இறுதியுத்தத்தில் வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரைச் சுட்டுக்கொன்ற வழக்கான வெள்ளைக் கொடி வழக்கில் புதிய சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மனித உரிமைச் சட்டத்தரணியும், ஐக்கிய நாடுகள் சபை செயலாளரின் இலங்கை தொடர்பான முன்னாள் நிபுணத்துவ ஆலோசகருமான யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

தற்போது கிடைத்துள்ள தகவல்கள் இலங்கை மீது சர்வதேச விசாரணையைத் தேவைப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் என்னும் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடுதலைப்புலிகளின் காவல்துறை, அரசியல் மற்றும் சிவில் அமைப்புக்களின் தலைவர்களைச் சரணடைய வாய்ப்பளிக்காமல் அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்ற அரசின் திட்டமிட்ட நடவடிக்கை வெளிப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கையானது மிகப் பெரிய மனித உரிமை மீறல் எனவும் அவர் தனது கருத்தை விடுத்துள்ளார்.

யுத்தத்தின் இறுதித் தினத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் அனைத்துத் தொடர்பாடல்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட அறிக்கையின் ஊடாக வெள்ளைக் கொடி விவகாரமும், அவ்விவகாரம் தொடர்பாக அப்போதைய இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளராக இருந்த பாலித ஹொகன சரணடைபவர்கள் எவ்வாறு எப்போது சரணடைய வேண்டும் என்பதை விளக்கி விடுதலைப் புலிகளின் தரகராகச் செயல்பட்ட ஐரோப்பிய பிரதிநிதி ஒருவருக்கு அனுப்பிவைத்ததாகக் கூறப்படும் கைத்தொலைபேசிக் குறுஞ் செய்திகள், இலங்கையின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே சரணடைதல் தொடர்பாக நடைபெற்றதாகக் கூறப்படும் தொலைபேசிச் சம்பாசனைகளும், சரணடைந்தவர்களுக்கு என்ன நடைபெற்றது என்பதை கண்ணால் கண்ட நான்கு சாட்சியங்களின் சாட்சிக் குறிப்புக்களும் வெளிவந்துள்ளன.

## இசைப்பிரியாவைத் தெரியாது

இராணுவ முகாமில் இசைப்பிரியா மற்றும் உசாளினி என்று ஊடகங்களில் வெளியான புகைப்படங்களில் இருக்கும் இரு பெண்கள் தொடர்பில் இராணுவத்துக்கு தெரியாது என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டார்.

ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்கள் யார், எவர் என்பது தொடர்பில் நாங்கள் அறியோம். அவர்களின் பெயர்கள் இசைப்பிரியா, உஷாலினி என்பதைக் கூட ஊடகங்கள் வாயிலாகவே நாம் அறிந்து கொண்டோம்.

இசைப்பிரியா மற்றும் அவருடன் உள்ள பெண் தொடர்பாக ஊடகங்களில் வெளியான புகைப்படங்கள் மற்றும் செய்திகளுடன் இராணுவத்தின் விசாரணை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இராணுவத்தின் விசாரணை நீதிமன்றத்தின் கீழ் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக சனல் - 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட வீடியோ காட்சிகள், உண்மையானவையா அல்லது பொய்யானவையா என்பது தொடர்பிலும் இந்த இராணுவ விசாரணை நீதிமன்றம் விசாரணை செய்து வருகின்றது.

இது தவிர, குறித்த புகைப்படத்தில் இருப்பவர்கள் யார் என்பது தொடர்பில் இராணுவத்துக்கு தெரியாது என்று இராணுவ பேச்சாளர் மேலும் கூறினார்.

## இசைப்பிரியாவுடன் இருப்பது எனது மகள்




விடுதலைப்புலிகளின் தொலைக்காட்சி அறிவிப்பாளராக இருந்த இசைப்பிரியா இராணுவ காப்பரண் ஒன்றிற்குள் இருப்பது போன்று ஊடகங்களில் வெளியாகியுள்ள புகைப்படத்தில் அவருடன் இருப்பவர் மல்லாவி,யோகபுரம், கிழக்கைச் சேர்ந்த குணலிங்கம் உஷாளினி என அவருடைய குடும்பத்தினர் கூறியிருக்கின்றனர்.

இணைய தளங்களிலும் பின்னர் உள்ளூர் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ள இந்தப் படத்தைப் பார்த்ததும் இசைப்பிரியாவுடன் இருப்பவர் தனது மகள் என்று அடையாளம் கண்டுள்ளதாக அவருடைய தந்தையார் தெரிவித்துள்ளார். (இந்தப் புகைப்படங்களின் உண்மைத் தன்மை குறித்து பிபிசியால் முழுவதுமாக சரிபார்க்க முடியவில்லை.)

கடந்த 2008 ஆம் ஆண்டு வீட்டுக்கு ஒருவர் போராட்டத்தில் இணைய வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்த நேரம் தமது மூத்த மகளாகிய உஷாளினியை அவர்கள் பிடித்துச் சென்றிருந்ததாகவும், யுத்தம் தீவிரமடைந்து தாங்கள் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்குச் சென்றிருந்தபோது ஒருநாள் தமது மகளைக் கண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அப்போது அவரைத் தம்முடன் வருமாறு கேட்டதற்கு அவர் வரவில்லை என்றும் அதன்பின்னர் யுத்தம் முடிவடைந்து தாங்கள் இடம்பெயர்ந்து செட்டிகுளம் மனிக்பாம் இடைத்தங்கல் முகாமுக்கு வந்திருந்த போது தமது மகளைத் தேடியபோதிலும் அவர் கிடைக்காத காரணத்தினால் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடமும் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் அவரைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி முறையிட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவிலும் காணாமல் போயுள்ள தனது மகளைத் தேடித்தருமாறு தாங்கள் கோரியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் தமது மகள் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியாத நிலையில் சில தினங்களுக்கு முன்னர் உள்ளூர் பத்திரிகையொன்றில் இசைப்பிரியாவுடன் காப்பரண் ஒன்றினுள் தனது மகள் இருப்பதைக் கண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து உதவிய மன்னார் பிரஜைகள் குழுவினரிடம் முறையிட்டுள்ளதாகவும் உஷாளினியின் தந்தையார் குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

இசைப்பிரியா இராணுவத்தின் பிடியில் இருந்தார் என்றும் பின்னர் அவர் இறந்து கிடந்தார் என்றும் காணொளிகள் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்த நிலையில் இப்போது அவர் இராணுவ பங்கர் ஒன்றுக்குள் உயிருடன் இருப்பது போன்ற புகைப்படம் வெளியாகி மேலும் பரபரப்பை அதிகரித்துள்ளது.

இந்தத் தகவல்கள் குறித்து இலங்கை இராணுவத்தின் சார்பில் பேசவல்ல ருவான் வணிகசூரிய அவர்களிடம் கேட்டபோது இப்படியான படங்கள் குறித்து எழுந்தமானமாக எதுவும் கூறமுடியாது என்றும் அவை குறித்து ஆராயும் குழு அவற்றை முழுமையாக ஆராய்ந்த பின்னரே அவை குறித்துக் கூறமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

(பி.பி.சி. தமிழ்)

## மேற்குத் தூதர்கள் புறக்கணிப்பு

(பி.பி.சி. தமிழ்)

இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகள் மீதான தமது வெற்றியின் 5வது ஆண்டு நிறைவை இன்று அனுட்டிக்கிறது. அதனை முன்னிட்டு பெரும் இராணுவ அணிவகுப்பு அங்கு நடந்தது. ஆனால், பல மேற்கு நாடுகளின் தூதுவர்கள் அந்த அணிவகுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அரசாங்கம் நல்லிணக்கத்தை நோக்கி செயற்பட வேண்டும் என்பதால், இவை பொருத்தமற்றவை என்று கனடா கூறியுள்ளது.

தோல்வியடைந்த தரப்பில் இறந்தவர்களுக்காக, தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நிகழ்வுகள் மற்றும் மத வைபவங்களுக்கும் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

தமிழர்கள் அதிகமாக வாழும் வட பகுதியில் சில குறிப்பிட்ட இடங்களில் இலங்கை இராணுவம், மக்கள் நடமாட்டத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்த தினத்தை குறிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் ஒன்று கூட நடக்க முடியாமல் போனது.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் அந்த அமைப்புக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க முயலுவதாலேயே இந்தத் நடவடிக்கைகள் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியுடன் மோதுமா இலங்கை

-கே.சஞ்சயன்-

நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கம் புதுடெல்லியில் அமைவது தமக்குச் சாதகமானது போன்று கருத்து வெளியிடத் தொடங்கியுள்ளது இலங்கை அரசாங்கம்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணத் தொடங்கியதை அடுத்து வெளியான ஆரம்ப நிலவரங்களே, காங்கிரஸ் கட்சி படுதோல்வி கண்டுவிடும் என்பதையும் பா.ஜ.க. தான் ஆட்சியமைக்கப் போகிறது என்பதையும் தெளிவாகப் புலப்படுத்தின.

உடனடியாகவே, பா.ஜ.கட்சியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த நரேந்திர மோடிக்கு தொலைபேசியில் வாழ்த்துத் தெரிவிப்பதில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' முந்திக்கொண்டிருந்தார்.

முக்கியமான உலகத் தலைவர்கள் அனைவருமே தேர்தல் முடிவுகள் முறைப்படியாக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே வாழ்த்துத் தெரிவிப்பதற்கு முண்டியடித்தனர்.

அவர்கள் எல்லோரையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' முந்திக்கொண்டு விட்டார் என்பதில் இலங்கை அரசாங்கம் திருப்திகொள்கிறது.
அது மட்டுமல்லாமல், புதுடெல்லியில் ஏற்பட்டுள்ள இந்த ஆட்சி மாற்றத்தை கொழும்பு விரும்புவது போன்ற தோற்றப்பாட்டையும் உருவாக்க அரசாங்கம் முனைகிறது என்பதில் சந்தேகமில்லை.

நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்த தகவல், மின்னல் வேகத்தில் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது. டுவிட்டரிலும் அதுபற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' குறிப்பிட்டிருந்தார்.
நரேந்திர மோடி அதிகாரபூர்வமான முறையில் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட முன்னரே, அவரை கொழும்புக்கு வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'.

அதற்கு டுவிட்டரில் பதில் அளித்திருந்த நரேந்திரமோடி, இலங்கையுடன் வலுவான உறவுகளை எதிர்பார்த்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.
இவையெல்லாம், புதுடெல்லியில் பா.ஜ.க. அரசாங்கம் அமைய வேண்டும் என்று மஹிந்த ராஜபக்' அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது போன்றும் நரேந்திர மோடியின் வெற்றியை கொழும்பு சாதகமானதாக கருதுவது போன்றும் தோற்றப்பாட்டை உருவாக்கின.
அது மட்டுமல்லாது, அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல்லவும், இந்தியாவில் பலமான ஆட்சி ஒன்று அமைவதை அரசாங்கம் விரும்புவதாகத் தெரிவித்திருந்தார்.
இந்தியத் தேர்தல் முடிவுகளையும் நரேந்திர மோடியின் வெற்றியையும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது போன்று காட்டிக்கொள்ள முயன்றது அரசாங்கம்.
ஆனால், உண்மை அதற்கு எதிர்மாறானது. புதுடெல்லியில் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சி காண்பதை கொழும்பு விரும்பவில்லை என்பதே உண்மை.
ஏனென்றால், மஹிந்த ராஜபக்' அரசாங்கத்துக்கு காங்கிரஸ் அரசாங்கம் பெரியளவில் உதவியதே தவிர, உபத்திரவங்களை கொடுத்ததில்லை.
விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது எந்த எதிர்ப்பையும் காட்டாமல், புதுடெல்லி பச்சைக்கொடி காண்பித்திருந்தது.
அதன் பின்னரும் கூட, இலங்கை அரசாங்கத்துக்கு புதுடெல்லி பெரியளவில் எந்தத் தலைவலியையும் கொடுக்கவில்லை.
இரண்டு தடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்திருந்தபோதும் கூட, அது காங்கிரஸ் அரசாங்கத்தின் சுதந்திரமான முடிவு அல்ல என்பதை கொழும்பு நன்றாகவே உணர்ந்திருந்தது.
தமிழ்நாட்டின் அழுத்தங்களால்தான், தன் மீது அழுத்தங்களைக் கொடுக்க புதுடெல்லி முனைவதாக கொழும்பு உணர்ந்திருந்ததால், இருதரப்பு உறவுகளில் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படவில்லை.
அதற்காக போருக்குப் பின்னர் இந்திய - இலங்கை இராஜதந்திர உறவுகள் எந்தச் சிக்கலுமின்றி திருப்தியாக இருந்தது என்று அர்த்தமில்லை. அண்மைக்காலத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் காப்பாற்றத் தவறிவிட்டது என்ற வருத்தம், மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்திடமிருந்து வந்தது.
அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியா கொடுக்கும் மென் அழுத்தங்கள் மற்றும் ஜெனீவா தீர்மானங்களில் இந்தியாவின் அணுகுமுறைகள் குறித்தும் இலங்கைக்கும் வருத்தம் இருந்தது.
இதனால், இருதரப்பு உறவுகளில் ஒரு இடைவெளி தோன்றியதை மறுக்கமுடியாது. ஆனால், அதற்காக இருதரப்பு உறவுகளில் முறிவு ஏற்பட்டு விட்டதாகவும் அர்த்தம் கொள்ள முடியாது.
தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் கருத்து வெளியிட்ட மன்மோகன் சிங், அரசாங்கத்தில் இறுதியாக வெளிவிவகார அமைச்சராக இருந்த சல்மான் குர்ஷித் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், இந்திய - இலங்கை உறவுகள் நன்றாகவே இருந்ததாக குறிப்பிட்டிருந்தார்.
போருக்குப் பிந்திய காலகட்டங்களில் பல விடயங்களில் கருத்து வேறுபாடுகள் மற்றும் மனக்கசப்புகள் இருந்தாலும், அதை இருதரப்புக்குமே ஒருபோதும் வெளிக்காட்டிக் கொண்டதில்லை.

ஒருவரை ஒருவர் விமர்சிக்கவோ, விட்டுக்கொடுக்கவோ இல்லை. இது ஒன்றே இந்திய - இலங்கை உறவுகளில் முறிவுகள் இல்லை, வெறும் இடைவெளிதான் உள்ளது என்பதை உறுதிப்படுத்தப் போதுமானது.

மன்மோகன் சிங் அரசாங்கத்தின் பத்தாண்டு ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு, இந்தியா பல்வேறு விடயங்களில் பக்கபலமாக நின்று உதவியதுடன், பெரியளவில் முரண்படாமலும் நடந்துகொண்டிருந்தது.

ஒரேயொரு விடயத்தில்தான், இலங்கைக்கு சற்று கலக்கம் இருந்தது.

புதுடெல்லியின் முடிவுகளின் மீது செல்வாக்குச் செலுத்தத்தக்க நிலையில், தமிழ்நாடு இருப்பது ஒன்றுதான், இலங்கை அரசாங்கத்துக்கு கலக்கத்தையும் கடுப்பையும் ஏற்படுத்துவதாக இருந்தது.

தமிழ்நாட்டின் ஆதிக்கம் புதுடெல்லி மீது இருப்பது தவிர்ந்த மற்றெல்லா வகைகளிலும், காங்கிரஸ் அரசாங்கத்தின் ஆட்சியும் அணுகுமுறைகளும் கொழும்புக்கு உவப்பானதாகவே இருந்தன.

இப்படிப்பட்ட நிலையில், பா.ஜ.க. ஆட்சியமைப்பதையோ, நரேந்திரமோடி பதவிக்கு வருவதையோ இலங்கை அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்த்தது என்றால், அது அப்பட்டமான பொய்யே.

காங்கிரஸ் அரசாங்கத்துக்கு தேர்தலில் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் இலங்கை அரசாங்கம் எந்தளவுக்கு அக்கறைகொண்டிருந்தது என்பதற்கு ஒரு சிறிய உதாரணமே போதும்.
இந்தியத் தேர்தல்கள் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்த நிலையில், இம்மாத தொடக்கத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள.
கடந்த வருடம் இந்திய நாடாளுமன்றத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி வெளியிட்ட ஒரு அறிக்கையில் இலங்கையிடமிருந்தும், இந்தியா ஆயுத தளபாடங்களை வாங்கியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.
இந்தியாவுக்கு என்ன ஆயுதங்கள் விற்கப்பட்டன, எந்த அடிப்படையில் அவை விற்கப்பட்டன, அதன் மூலம் அடைந்த ஆதாயங்கள் என்ன என்ற கேள்விக்கொத்து ஒன்றை பிரதமர் டி.எம்.ஜெயரட்னவிடம் தலதா அத்துகோரள கேட்டிருந்தார்.
அப்போது பிரதமர் டி.எம்.ஜெயரட்ன, வியட்நாம் சென்றிருந்தார். அதனால், அரச தரப்பு கொரடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவே அதற்குப் பதிலளித்திருந்தார்.
இந்தக் கேள்விகளுக்குத் தற்போது பதிலளிக்க முடியாது என்றும் இது இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதால், இரண்டு மாதங்கள் கழித்து பதிலளிப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.
தாம் அளிக்கும் பதில் இந்திய அரசாங்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்ற அக்கறை இலங்கை அரசாங்கத்திடம் இருந்ததையே இது வெளிப்படுத்தியது.
இப்படிப்பட்ட சூழலில் காங்கிரஸ் அரசாங்கம் வீழ்ந்து, பா.ஜ.க. அரசாங்கம் பதவிக்கு வரவேண்டும் என்று கொழும்பு ஆவல் கொண்டிருந்தது என்று கூறினால் அதை யாரும் நம்பப் போவதில்லை. ஆனால், அப்படி நம்ப வைக்கவே அரசாங்கம் முனைவதாகத் தெரிகிறது.
புதுடெல்லியில் நரேந்திர மோடி தலைமையிலான பலமான அரசாங்கம் அமைவதை இலங்கை விரும்புவதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார்.
இந்த விடயத்தில் இந்தியத் தேர்தல் முடிவு இலங்கை அரசாங்கத்துக்கு அளித்துள்ள ஒரே ஆறுதல், புதுடெல்லி மீது செல்வாக்குச் செலுத்தும் திறனை தமிழ்நாடு இழந்து போயிருப்பது மட்டும்தான்.
மன்மோகன் சிங்கின் பத்தாண்டு கால ஆட்சியிலும், அதற்கு முந்திய பா.ஜ.க. ஆட்சியிலும் புதுடெல்லியின் முடிவுகள் மீது தமிழ்நாடு ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இருந்து வந்தது.
அதாவது, தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஏதாவதொரு மாநிலக் கட்சியின் தயவுடன் தான் முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாயம் புதுடெல்லிக்கு இருந்து வந்தது.
குறிப்பாக, 2012ஆம் 2013ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை இந்தியா ஆதரித்திருந்தது.
இது இந்தியா இதுவரை கடைப்பிடித்துவரும் வெளிவிவகாரக் கொள்கைக்கு முரணான முடிவாகவே இருந்தது. ஆனாலும், தமிழ்நாட்டின் நெருக்குதல் காரணமாக அதற்கு அடிபணிந்து புதுடெல்லி முடிவெடுக்க நேர்ந்தது. ஆனால், 2014ஆம் ஆண்டு தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவில்லை. அதற்குக் காரணம், காங்கிரஸ் அரசின் மீது தமிழ்நாடு கொண்டிருந்த கடிவாளம் கழன்று போனதுதான்.
இந்தத் தேர்தலில், எந்தவொரு மாநிலக் கட்சியினது தயவையும் நம்பியிருக்கவேண்டிய தேவையை பா.ஜ.கட்சிக்கு இல்லாமல் செய்துவிட்டது.

தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜ.கட்சியின் மீது தமிழ்நாடு அழுத்தங்களைக் கொடுக்க முடியாது என்பது ஒன்றுதான், இந்தியத் தேர்தல் முடிவு கொழும்புக்குக் கொடுத்துள்ள ஆறுதலான விடயம்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கடந்த வாரம் செய்தியாளர்களை சந்தித்தபோது கூட, இதனை வெளிப்படையாக கூறியிருந்தார்.

தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதாவின் தயவின்றி புதுடெல்லியில் ஆட்சி அமைவது மகிழ்ச்சியான விடயம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.
இந்த விடயத்தில் பலமான அரசாங்கம் ஒன்று புதுடெல்லியில் பதவிக்கு வருவது வேண்டுமானால், இலங்கைக்கு மகிழ்ச்சி தரும் விடயமாக இருக்கலாம்.

ஆனால், வலுவான மத்திய அரசாங்கம் ஒன்று புதுடெல்லியில் ஆட்சியில் அமர்வது ஒருபோதும் கொழும்புக்குச் சாதகமானதாக இருக்க முடியாது.


ஏனென்றால், மன்மோகன் சிங் அரசாங்கம் கொள்கை ரீதியாக முடிவெடுக்கத் தயக்கம் காட்டும் ஒன்றாக இருந்ததால்தான், வெளிவிவகாரக் கொள்கை விடயங்களில் நெகிழ்ச்சிப் போக்குடன் நடந்துகொள்ள வேண்டியிருந்தது.
உறுதியான அரசாங்கமாக அது இருந்திருந்தால், பல விடயங்களில் இலங்கை அரசாங்கத்தினால் இந்தியாவினது சொல்லைத் தட்டிக்கழிக்க முடியாமல் போயிருக்கும்.
குறிப்பாக, 13ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் இன்றுவரை நிறைவேற்றவில்லை.
இது போன்று இந்தியாவின் பல கோரிக்கைகளை கொழும்பு அலட்சியம் செய்து வந்துள்ளது.
ஆனால், புதுடெல்லியில் வலுவான ஒரு அரசாங்கம் அமைந்தால், இத்தகைய உதாசீனப்படுத்தல்களுக்கு ஒருபோதும் இடமளிக்காது என்பது கொழும்புக்கு நன்றாகவே தெரியும்.
இருந்தாலும், நரேந்திர மோடி அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை முந்திக்கொள்வது அதனைத் தனது கைக்குள் போட்டுக்கொள்வதற்கேயாகும்.
ஏனென்றால், காங்கிரஸ் அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையை நரேந்திர மோடியும் பா.ஜ.கட்சியும் கடுமையாக விமர்சித்து வந்த நிலையில், இந்தியாவின் நிலைப்பாடுகள் மாற்றமடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன.
குறிப்பாக பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கமான உறவை, நரேந்திரமோடியின் அரசாங்கம் தவறான கண்ணோட்டத்துடன் அணுகிவிடக்கூடாது என்று கொழும்பு நிச்சயம் கவனம் செலுத்தும். இந்த மூன்று நாடுகளினதும் நட்பை விட்டுக் கொடுக்கும் நிலையில் கொழும்பு இல்லை.
அதேவேளை, இந்தியாவின் இரண்டு பிரதான போட்டியாளர்களான பாகிஸ்தான், சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவை இந்திய அரசு சகித்துக்கொள்ளவும் வேண்டும். அதற்கான இராஜதந்திர முன்னகர்த்தலைத்தான் கொழும்பு இப்போது செய்து வருகிறது.
நரேந்திர மோடியுடன் ஏற்படுத்திக்கொள்ளத் துடிக்கும் உறவின் மூலம் தனக்கான ஒரு கவனத்தை உருவாக்கிக்கொள்ள கொழும்பு முனைகிறது.
அதற்கு பா.ஜ.கட்சியில் உள்ள சுஸ்மா சுவராஜ் மற்றும் சுப்ரமணியம் சுவாமி ஆகியோர்தான், நம்பிக்கை நட்சத்திரங்களாக மஹிந்த ராஜபக்' அரசுக்கு உள்ளனர்.
ஆனால், நரேந்திர மோடி அரசாங்கம் பதவிக்கு வருவது இலங்கைக்கு அவ்வளவு நல்ல சகுனமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.
இருந்தாலும், புதுடெல்லியை வசப்படுத்துவதற்கு கொழும்பு உச்சக்கட்ட முயற்சிகளை எடுக்கிறது, இன்னும் எடுக்கும்.
ஏனென்றால், இந்திய மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பதவிக்கு வந்துள்ள ஒரு அரசாங்கத்தைப் பகைத்துக்கொள்வது உலகளவில் இலங்கைக்கு இன்னும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கொழும்பு அறியாதிருக்காது. எனவே, முடிந்தவரை புதுடெல்லிக்கு நேசக்கரம் நீட்டவே முயற்சிக்கும்.
நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பெரும்பாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இதனைப் புதிய இந்திய அரசாங்கத்துடன், நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் நினைக்கிறது.
அது எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது போகப்போகத்தான் தெரியவரும்.
ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயமானது, 13ஆவது திருத்தச்சட்ட நடைமுறைப்படுத்தல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களிலும், இதுவரை மன்மோகன் சிங் அரசாங்கத்தை ஏமாற்றியது போன்று நரேந்திர மோடி அரசாங்கத்தையும் சமாளித்துவிடலாம் என்று மட்டும் தப்புக்கணக்குப் போடப்பட்டால், அது இலங்கைக்கு பல சவால்களை ஏற்படுத்தும்..

நன்றி-தமிழ்மிரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு"

...நாட்டு நடப்பு...



ஜேசு பிரான் தன்னை சிலுவையில் அறைந்து துன்புறுத்திய, கசப்பான காடியை குடிக்க கொடுத்து அவர் முகத்தில் காறித் துப்பிய அத்தனை பேர் சார்பிலும் 'பிதாவே இவர்கள் அறியாமல் புரிகிறார்கள். இவர்களை மன்னியும்" என அன்று பிதாவிடம் வேண்டினார்.


மகாத்மா காந்தி தன்னை துப்பக்கியால் சுட்ட கோட்சே என்பவனுக்கு தண்டனை வழங்காது மன்னிப்பு அளிக்கும்படி சாகும் தருவாயில் கேட்டுக் கொண்டார்.

புத்த பெருமான் தன்னை வழியில் வைத்து வாளால் வெட்டி சாய்க்க வந்த அங்குலிமாலா என்பவனுக்கு எந்தவித தீங்கும் விளைவிக்காது அவனை மன்னித்து நல்வழிப்படுத்தினார்.

மன்னிப்பபது தெய்வத்தன்மை, மறப்பது மனிதத்தன்மை, பழிவாங்குவது மிருகத்தன்மை என்றெல்லாம் பாரியளவிலான உபதேசங்களை நாம் பின்பற்றும் அனைத்து மதங்களூடாக கற்றுக் கொண்டாலும் இன்னமும் மானிடனாகப் பிறந்த எம்மிடம் பழிவாங்கும் குணமே தொடர்ந்தும் இருந்து வருகிறது.

அன்று வாழ்ந்த உலக மகான்கள் கூட பல சந்தர்ப்பங்களில் பலரை மன்னித்து விட்டாலும் இந்த நூற்றாண்டில் வாழும் அந்த மாகாண கல்விச் செயலாளரும், அம் அமைச்சிலே கடமைபுரியும் அந்த ஊழியரும் ஆளுக்கால் முட்டி மோதிக்கொண்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த மாகாண கல்விச் செயலாளர் தேவையற்ற விதத்தில் அந்த அப்பாவி ஊழியரை சீண்டப் போனதாலே பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டன. மிக இரகசியமாக இடம்பெற்ற தனிப்பட்ட ஒரு சம்பவத்தினை தன்னுடன் மிக நெருக்கமாக இருந்த அந்த ஊழியர் சகலருக்கும் பிரசித்தப்படுத்திவிட்டாரே என்ற கடும் ஆத்திரத்தால் ஏற்பட்டதே அவ்விருவருக்கும் இடையில் உருவாகிய அப்பிரச்சினை.



'சேர், உங்களுக்கு என்னைப் பற்றி நல்லாகத் தெரியும். எனக்கு கோபம் வந்தால் நான் யார் பேச்சையும் கேட்பதில்லை. ஏன்? என் பேச்சைக் கூட கேட்க மாட்டேன். நான் உங்களுக்கு எதிராக ஒன்றுமே செய்யவில்லை. நம்பினால் நம்புங்கள்' என்று அந்த ஊழியர் மிக தாழ்மையாக கூறியும் அந்த கல்விச் செயலாளர் கேட்டபாடில்லை. மது போதையில் தகாத வார்த்தை பிரயோகத்தை மேற்கொண்டதால் அவர் கன்னங்களை ஊழியரின் கரங்கள் பளார்... பளார் ... என பதம் பார்த்தன.

இனி கேட்கவா வேண்டும்? கல்விச் செயலாளர் தனது உயர் அதிகாரிகளுக்கு தான் கன்னங்களில் வேண்டியதைப் பற்றி புகார் செய்தார். மேலும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு தெரிய வந்தது மட்டுமன்றி தனது சொந்த செல்வாக்கை பிரயோகித்து நடவடிக்கை பலவற்றை எடுத்திருந்தார். அப் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற உத்தரவின் படி குறித்த ஊழியரை கைது செய்ய பல முயற்சிகளை எடுத்தும் அது பயன் அளிக்கவில்லை.

அதற்கிடையில் அந்த ஊழியர் உடனடியாக செயல்படும் வகையில் முற்றாக பணிநீக்கம் செய்யப்பட்டதாக (Termination of Service) பதிவுத் தபால் மூலம் சம்பந்தப்பட்டவர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. குறித்த அமளிதுமளி அப்பிரதேச ஆளும்கட்சியை சார்ந்த ஓர் அரசியல் பிரமுகருக்கும் தெரியவந்தது.

அவர் அது தொடர்பாக காவல்துறை பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்ட பொழுது அந்த அதிகாரி நடந்த சம்பவத்தை விளக்கிவிட்டு இவ்வாறு கூறினார். 'இதுவரை குறித்த ஊழியரை கைது செய்ய முடியவில்லை, தலைமையகத்திலிருந்து அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. எனக்குத் தெரியும் அவர் தற்பொழுது எங்கு இருக்கிறார்' என்று தமாஷாக கூறினார்.

அது மாத்திரமல்ல 'உங்கட வீட்டில தஞ்சம் புகுந்துள்ள அவரை ஒரு த்டவை என்னை இரகசியமாக சந்திக்கும்படி கூறுங்கள், இருட்டுப்பட்டதும் எனது விடுதிக்கு அவரை தனியாக அனுப்பிவையுங்கள். மிகுதி வேலையை நான் கவனித்துக் கொள்கிறேன்.' என மேலும் பொறுப்பதிகாரி அரசியல்வாதிக்கு ஆலோசனை வழங்கினார். உண்மையில் அந்த ஊழியருக்கு உதவும் நோக்கம் அவரிடம் இருந்தது. அதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் காவல்துறை பொறுப்பதிகாரி கூட அந்த ஊழியரின் பக்கம் என்பதே அதனால் தான் அவரை தனது விடுதிக்கு அழைத்திருந்தார்.

பொறுப்பதிகாரி கூறிய பிரகாரம் தனது வீட்டில் தஞ்சம் புகுந்த ஊழியரை பொறுப்பதிகாரியின் விடுதிக்கு அந்த அசியல்வாதி அனுப்பிவைத்தார். இரகசியமான முறையில் அவரிடம் இருந்து வாக்கு மூலத்தைப் பெற்று குறித்த பிரச்சினையில் இருந்து அவரை விடுவித்தார் அந்த பொறுப்பதிகாரி. விடுதியில் நடந்தவை எதுவும் காவல் நிலையத்திலுள்ள எந்தவொரு உத்தியோகத்தருக்கும் தெரியாது.

'நான் ஓர் அரசாங்க ஊழியர் அத்துடன் பொறுப்பான பதவி வகித்துக் கொண்டு ஓர் உயர் அதிகாரியைத் தாக்கினால் அதன் விளைவுகள் என்ன? என்பது பற்றி நான் அறியாமலல்ல. எனவே எனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையற்றதும் ஆதரமற்றதுமாகும். சொந்த பிரச்சினை தொடர்பாக பழிதீர்க்கும் வகையில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்ற வாக்குமூல பகுதியை மட்டும் காவல்துறை உயர் அதிகாரிகள் கவனத்தில் எடுத்து முறைப்பாட்டுக் கோவையை முற்றாக மூடிவிட்டனர்.

இருப்பினும் தற்பொழுது அந்த ஊழியர் வேலை இல்லாமல் இருக்கிறார். அதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ள வேண்டுமல்லவா? சட்டத்துறையை சார்ந்த பல நண்பர்கள் அவருக்கு உதவ முன்வந்தார்கள். மேல் நீதிமன்றத்தில் மீண்டும் வேலையைப் பெற்றுக் கொள்ள வழக்கு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அவருக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்தும் வேலை வழங்கப்படாது. அத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டது.

எப்படியும் குறித்த ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்கப்படக் கூடாதென்பதில் உறுதியாக செயல்பட்டு ஒட்டுமொத்த மாகாண நிர்வாகமும் அந்தக் கல்விச் செயலாளரின் பக்கமே சார்ந்து நின்றது. ஆனால் அந்த ஊழியர் எதற்கும் தளர்ந்து போகவில்லை. மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகளுக்கும் முகம் கொடுத்தார். அங்கும் அவருக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேலும் அந்த மாகாண நிர்வாக ஊழியர் தொடர்பான சகல விடயங்களிலும் மூக்குடைந்ததால் எப்படியோ அந்த ஊழியருக்கு மாகாண பதிப்பகத் திணைக்களத்தில் மீள் சேவை அடிப்படையின் கீழ் பதவி ஒன்றை வழங்கி விட்டு அங்கும் அவரை நிம்மதியாக கடமையாற்ற இடமளிக்காது மீண்டும் தகுந்த காரணமின்றி அவரை தற்காலிக பணிநீக்கம் செய்தது. அந்த ஊழியர் அதற்கும் சளைத்துப் போகாது துணிந்து போராடினார். ஒருவரை தற்காலிக பணிநீக்கம் செய்யும் முன் எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக குறித்த ஊழியரிடம் எழுத்து மூல விளக்கம் கோரப்பட்டிருக்க வேண்டும்.



ஆனால் அந்த ஊழியரின் விடயத்தில் நிர்வாகம் முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளாததினால் மீண்டும் மூக்குடைபட்டு, திரும்பவும் வேலைக்கு சேர்த்துக் கொண்டது மேலும் நிர்வாகம் எதெச்சதிகாரமாக நடந்து கொள்கிறது என்பதனை விசாரணைக்குழு தனது அறிக்கையில் தெளிவாக சுட்டிக் காட்டத்தவறவில்லை. சகலவற்றுக்கும் காரணம் அந்த கல்விச் செயலாளரே. இலஞ்சம், ஊழல் போன்ற பல மோசடிகள் தொடர்பில் அச் செயலாளருக்கு தொடர்பு இருந்ததாகவும் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

வருடாந்த பொருள் கணக்கெடுப்பு (Annual Board of Survey) சபையை திசை திருப்பி பல இலட்சக்கணக்கான (Pick up) வாகனமொன்றை அதாவது எவ்வித பழுதுமில்லாத அந்த வாகனத்தை ஓட முடியாத வாகனம் என குறிப்பிட்டு ஏலத்தில் விற்பதற்கு அவரே சிபார்சு செய்து அவரே இன்னுமொரு நபரின் போலிப் பெயரில் கொள்வனவு செய்திருந்தார்.


எப்படி இருக்கிறது கில்லாடி செயலாளரின் கில்லாடித்தனம்? அவர் கிரமமாக மேற்கொண்டு வந்த அத்தனை கில்லாடித்தனத்தையும் வரிசைப்படுத்தி மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற நிர்வாகக் குழுவுக்கும் குறித்த ஊழியர் புகார் செய்திருந்தார். அதனால் எந்தவொரு சேவை நீடிப்பும் வழங்கப்படாது நேரகாலத்துடன் அந்த செயலாளர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அவரின் சம வயதைக் கொண்டவர்களும், வயது கூடியவர்களும் இன்னும் உயர் பதவிகளில் இருக்கும் பொழுது அவர் மட்டும் வீட்டில் முடங்கிக் கிடப்பது அவருக்கு பெரும் வேதனைதான்.

பலரின் வெற்றிக்கு பின்னால் பல பெண்கள் இருப்பார்கள் என்று கூறுவார்கள். ஆனால் இவரின் தோல்விக்கு பின்னால் பல பெண்கள் காரணமாக இருந்தார்கள். அந்த கல்விச் செயலாளருக்கு திருமணம் செய்யும் வயதில் பிள்ளைகள் இருந்தும் ஆங்கில ஆசிரிய ஆலோசகராக (ISA) இருந்த ஆசிரியை ஒருவரை தனது குடும்பத்தாருக்கு தெரியாமல் செய்த திருட்டுத் திருமணம் அங்கு அம்பலமானதிற்கு அந்த ஊழியர் தான் காரணமென தவறாக எடுத்த முடிவின் விளைவே சகல குளறுபடிகளுக்கும் காரணமாயின. அது மாத்திரமல்ல அந்த கல்விச் செயலாளர் தான் ஒரு முஸ்லீம் என்பதால் இரண்டாவது திருமண விடயத்தில் கூட அவர் அச்சப்படவில்லை.

- பாலையூற்றான் -

## 200 தீவிரவாதிகள் கொலை




நைஜீரியாவில் 'போகோ ஹாரம்' தீவிரவாதிகள் கடந்த மாதம் பள்ளி மாணவிகள் 300 பேரை கடத்தி சென்று சிறை வைத்துள்ளனர். மேலும் அவர்களை செக்ஸ் அடிமைகளாக விற்கப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர். இந்நிலையில் கலாபல்ஜ் மாவட்டத்தில் 3 கிராமங்களுக்குள் ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் புகுந்து மக்களை தாக்க முயன்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த கிராம மக்கள் வீட்டில் இருந்து அரிவாள், கத்தி, போன்ற ஆயுதங்களால் தீவிரவாதிகளை எதிர்த்து தாக்கினர். கிராம மக்களின் தாக்குதலில் 200 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே மாணவிகள் கடத்தப்பட்ட பகுதிக்கு நேரில் சென்று ஆறுதல் கூற நைஜீரியா அதிபர் குட்லக் ஜோனாதன் முடிவு செய்திருந்தார்.

## என்ன ஒரு சாதனை!!

பிரிட்டனில் உள்ள Lancashire, என்ற பகுதியை சேர்ந்த 39 வயது பெண் Sue Radford அவர்களுக்கு ஏற்கனவே 16 குழந்தைகள் உள்ளன. தற்போது மீண்டும் 17வது முறையாக கர்ப்பமாகி உள்ளார். அவருடைய 20 வயது நிரம்பிய மூத்த மகள் Sophieளும் தற்போது கர்ப்பமாக இருக்கிறார். இருவருக்கும் நவம்பர் மாதம் குழந்தைகள் பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னொரு ஆச்சரியம், தற்போது கர்ப்பமாக இருக்கும் Sophieக்கு இது இரண்டாவது குழந்தை என்பதுதான். Mrs.Radford அவர்களுக்கு 9 மகன்களும் 7 மகள்களும் இருக்கின்றனர்.



இவர் தனது கணவருடன் ஒன்பது படுக்கையறை கொண்ட வீடு ஒன்றில் தற்போது வாழ்ந்து வருகிறார். இவரது குடும்பம் குறித்து டாக்குமெண்டரி திரைப் படம் எடுத்துள்ளனர் சேனல் 4 தொலைக்காட்சியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருசேத்திரபுரம்

சிறுகதை

குருசேத்திரப் போரின் பதினாறாம் நாள் அன்றைய போரில் கௌரவ வீரர்களுக்கு தளபதியாக துரியோதனின் உற்ற நண்பன் மாவீரன் கர்ணன் தனது தேரின் மீது நின்றிருந்தான். பாரதப்போர் ஆரம்பமாகியதில் இருந்து தளபதியாகப் பொறுப்பேற்ற பீஷ்மர் கர்ணனை ஒரு சாதாரண வீரனாகக் கருதி புறக்கணித்தமையின் காரணமாக யுத்தகளத்தில் இருந்து விலகிச்சென்றிருந்தவன் கர்ணன். பத்தாம் நாள் போரில் பீஷ்மர் வீரமரணம் எய்தியதைத் தொடர்ந்து துரோணச்சாரியார் தளபதிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். பார்த்தசாரதியின் தந்திரத்தால் 'துரோணரின் மகன் அசுவத்தாமன் யுத்தகளத்தில் மாண்டான்' எனத் தர்மன் வாயால் பொய் சொல்லச் சொல்லி மகனின் இழப்பின் துயரில் நின்ற துரோணரை இலகுவாக வெற்றி கொண்டதன் பின்னர் பதினைந்தாம் நாள் போர் முடிவுக்கு வந்தது.

பாரதப்போர் ஆரம்பிக்க முன்னரே அப்போரின் வெற்றிகருதி மாயக் கண்ணனின் தந்திர வேலைகள் பல வழிகளில் பாண்டவர்களுக்கு துணையாகவே இருந்தது. விதுரனைவில் உடைக்கச் செய்து கௌரவர்கள் பக்கம் போரிடாமல் செய்தது தொடக்கம் கர்ணனின் மார்போடும் காதோடும் ஒட்டியிருந்த மார்புக் கவசத்தையும் குண்டலத்தையும் இந்திரனை அனுப்பி யாசகம் பெற்றது குந்தியைக் கர்ணனிடம் அனுப்பி "அர்ச்சுனனைத் தவிர வேறு பாண்டவர்களை போரில் கொல்வது இல்லை எனவும், நாகாஸ்திரத்தை அர்ச்சுனனின் மீது ஒரு தடவைக்கு மேல் பாவிப்பதில்லை" என்ற வரங்களை யாசிக்க வைத்ததும்" தனது மகன் அபிமன்யுவை கொண்ட மன்னன் சயத்திரதனை "மறுநாள் போரில் சூரியன் மறைவுக்கு முன்னர் கொல்வேன் அல்லது உயிர்துறப்பேன்" என்ற அர்ச்சுனனின் சபதம் வெற்றி பெற அர்ச்சுனனை கைலாயமலைக்கு அழைத்துச் சென்று சிவனிடம் இருந்து வரம் வாங்கியதும் பொய்கையில் ஒழிந்திருந்த சயத்திரதனை சூரியனை மறையச் செய்து அவனை வெளியே வரச்செய்து அர்ச்சுனன் தனது சபதம் முடிக்க உதவியது, எனப் பல அரசியல் காய்நகர்த்தல்களையும் ராஜதந்திர வேலைகளையும் செய்வித்த கண்ணன் பாண்டவர்களுக்கு அர்ச்சுனனின் தேரோட்டியாக மட்டுமல்லாமல் பாண்டவ படைகளின் தளபதி போலவே செயற்பட்டிருந்தான்.


கர்ணன் தனது கௌரவ சேனையை மகரவியூகமாக வகுத்து அதன் முன்னால் நின்றிருந்தான். அங்கதேச மன்னனின் மகுடத்தில் திகழும் மணிகள் சூரியக் கதிர்கள் போல ஒளிவீச, காதுகளில் அணிந்திருந்த பொன் குண்டலங்களும், மார்பில் அணிந்திருந்த பொன்கவசமும் கால்களில் கட்டியிருக்கும் வீரத் தண்டைகளில் பொருத்தியிருக்கும் மணிகளும் ஜொலிக்கக் கர்ணன் தன் தந்தை சூரியனைப் போலவே பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

16200905 எண்களில் காலம் கரைந்து கொண்டிருந்தது. புதிய புதிய போர்க்களங்கள் உலகம் எங்கும் திறக்கப்பட்டு மனித உயிர்கள் தத்தம் விருப்பங்களுக்கு ஏற்ப பலி கொல்லப்பட்டதன் தொடர்ச்சி. வீதி எங்கும் இரத்தச் சிதறல்கள், பிய்த்தெறியப்பட்ட சதைத் துண்டங்களின் உஷ்ணம் இன்னும் அடங்கவில்லை. கருகிச் சாய்ந்திருந்த மரங்களின் மீது மனிதச் சிதிலங்கள். ரத்தவீச்சையின் துர்நாற்றம் எங்கும் வியாபித்திருக்க வீதியில் சிதறிக்கிடந்த உடலங்களை இழுத்துக்கொண்டு நாய்கள் பற்றைகளை நாடிச் சென்றன. ரத்தவெறி கொண்ட மிருகங்கள் தங்கள் கரங்களில் புதிய புதிய படைக்கலங்களைத் தாங்கியபடி அப்பாவி மான்களை வேட்டையாடிக் கொண் டிருந்தன.

நாடு சுருங்கி ஊர்களாகி, ஊர்கள் சுருங்கி கிராமங்களாகி, கிராமங்கள் சுருங்கி மக்கள் ஒரு பொது வெளி நோக்கிக் குவிந்தனர். மக்களை நான்கு, திசையிலும் சுற்றிவளைத்த ஆக்கிரமிப்புக்கரங்கள் ஒன்றாய், பத்தாய், நூறாய் பலி கொள்ளத் தொடங்கியது.



உலக வல்லரசு முதல், தம் நலன்களை மட்டுமே முக்கியத்துவபடுத்தும் சிறிய நாடுகள் வரை கரங்களை இணைத்து வான வீதியெங்கும் ஏவுகணைச் சோதனை நடாத்திக் கொண்டிருந்தன. புதிய நவீன ஆயுதங்களின் பரிசோதனைக்களமாக, காலாவதியான



ஆயுதங்களின் விற்பனைத்தளமாக வெள்ளோட்டபவனி, முல்லை மண்ணின் மூலை முடுக்கெங்கும் நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

மனிதப் பேரவலத்தின் உச்சகட்ட நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்த தருணமது. தம் வாழ்வில் இறுதிக் கணங்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் இனிமேல் ஒன்றுமே செய்யமுடியாது என்ற நிலையில் வீரகாவியங்கள் பல எழுதி வெளியிட்ட எழுத்தாளன் மீண்டும் ஒரு காவியத்தினை எழுதத் தயாரானான். அந்தக் காவியத்திற்கான நடிகர்களை அழைத்து காவியத்தின் கதையையும் அதன் உயிர்ப்பு நிலையையும் எடுத்துச் சொன்னான். இந்தக் காவியத்திற்கு 'காவியத் தலைவன்' என்று ஒருவன் இல்லை. கதை மாந்தர்கள் அனைவருமே தலைவர்கள் தான். உங்களின் நகர்வுகள், நீங்கள் படைக்கும் வீர அத்தியாயங்களின் முழு மொத்த வடிவமே இந்தக் காவியம். எனவே இந்தக் காவியத்தின், கதையின் முடிவை தீர்மானிக்கப் போவது நீங்கள் தான். உங்கள் கரங்களில் தான் இதன் வெற்றி தங்கியுள்ளது. இந்தக் காவியத்தின் முடிவு எமது மக்களின் முடிவை அவர்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும். எனவே உங்களின் முழு மொத்தத் திறனையும் காட்டி நடிக்க வேண்டியது உங்களது கடமை. இது காலவரை உங்களை வைத்து நான் எழுதிய காவியங்களைப் படித்து உலகமே வியந்து பேசியது. ஆனால் இந்த உலகமே இன்று எம்மை வைத்துப் பகடையாடுகிறது. நாங்கள் நம்பிய மூத்த சகோதரனே எமக்கு எதிரியாக மட்டுமல்ல துரோகியாகி விட்டான். இனிமேல் எவரையும் நம்பிப் பயனில்லை. பாத்திரங்களே பேசட்டும். இந்தக் காவியத்தின் அரங்கேற்றம் நாளை நடைபெறட்டும். இன்று நீங்கள் ஒத்திகை பார்த்துக்கொள்ளுங்கள். பிரதான பாத்திரங்கள் துணைப்பாத்திரங்களை வழிநடத்தட்டும். இந்தக் காவியத்தின் அரங்கேற்றம் நாளை நடந்தால் எம்மக்களின் கதை மாறும். ஏன் இந்தத் தேசத்தின் கதையும் மாறும். நாம் ஒரு புது விதி செய்தவர்களாவோம். இதுவே எனது கடைசிப் படைப்பு. எழுத்தாளர் தனது பாத்திரங்களுடன் கதைத்து விட்டு தனது பயணத்தை ஆரம்பிக்க ஆயத்தமானார். போகும் முன்னர் அவரது கண்கள் பணித்தன. இந்தக் காவிய அரங்கேற்றம் நாளை எந்தத் தடங்கலுமற்று நடந்துவிட்டால் எம்மை நம்பி வாழ்ந்த மக்களை வாழவைக்கலாம். இத்தனை கால துன்பங்களையும் துடைத்தெறியலாம் ஆனால்....... ஆனால்.... துரோகியாக மாறிவிட்ட சகோதரன் இந்த காவிய அரங்கேற்றம் பற்றிய தகவலை எதிரியிடம் சொல்லாமல் இருக்க வேண்டும். அவரது சிந்தனை அவரது கதாபாத்திரங்களுக்கு விளங்கியது. "நீங்கள் போங்கள் நாங்கள் நடிக்கின்றோம்" என்ற அவர்களின் அன்பான கட்டளையை ஏற்று எழுத்தாளர் அவ்விடம் விட்டு நகர்ந்தார்.

மீண்டும் எண்கள் சுழன்று முன்னோக்கி நகர்ந்தன. பாரதப்போரின் பதினாறாம் நாள் போர் ஆரம்பமாகி விட்டிருந்தது. மாவீரன் கர்ணன் போர்க்களத்தில் பலவீர காவியங்களை எழுதிக் கொண்டிருந்தான். பீஷ்மரும், துரோணரும் தளபதிகளாக நின்ற காலத்தை விட பாண்டவப் படைகள் இன்றைய நாளில் அதிக இழப்புக்களைச் சந்தித்தன. தன் கணைகளால் நகுலனை துவமசம் செய்த கர்ணன் அவனைக் கொல்வதற்கு இறுதிக் கணையை பாய்ச்ச எத்தணிக்கையில் குந்திக்குக் கொடுத்த வரம் ஞாபகத்திற்கு வருகின்றது. 'போர்க்களத்தில் அர்ச்சுனனைத் தவிர வேறு எந்த பாண்டவர்களையும் கொல்லமாட்டேன் என்ற வாக்கு. கர்ணன் கொடுத்த வாக்கை காப்பதிலும் கர்ணன் அல்லவா. நகுலனைப் பார்த்து "போ போய்விடு" எனக் கூறியபடி போர்க் களத்தின் முன்நகர்ந்தான். மகரவியூகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று பாண்டவ படைகளை வேட்டையாடிய கர்ணனின் விழிகள் அர்ச்சுனனைத் தேடியது. அவனது அம்பறாத்துணியில் இருந்த நாகாஸ்திரம் "எப்போது என்னை அர்ச்சுனன் மீது செலுத்தப் போகிறாய்? நான் எப்போது அவனைக் கொல்வது?" எனக் கேட்டுக் கொண்டிருந்தது. திடீரென கர்ணனின் மூளையில் புதிய தந்திரோபாயம் ஒன்று மின்னி மறைந்தது. பாண்டவர்களின் தளபதி திட்டதுய்மன் வகுத்திருக்கும் சக்கரவியூகத்தை பிளந்துகொண்டு எதிரிப் படைகளுக்கு நடுவே சென்று அவர்களை துவம்சம் செய்வது என்ற நினைப்பு மனதில் எழுந்ததும் தனது களத்தளபதிகளை அழைத்து புதிய வியூகத்தினை வகுத்தான்.

போர் புரிந்து கொண்டிருந்த கர்ணன் திடீரென தனது தளபதிகளை அழைத்து இரகசிய ஆலோசனை நடத்தி அவர்களுக்கு கட்டளையிட்டதும் அவர்கள் முகங்களில் புதிய உற்சாகத்துடன் துரியோதனனின் தம்பிமாரையும் அழைத்துக் கொண்டு போர் அரங்கின் ஓர் பகுதியில் ஒன்று கூடுவதும் அர்ச்சுனனின் தேரோட்டியாக ஒருவகையில் பாண்டவர்களுக்குத் தளபதியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த பார்த்தசாரதியின் கண்களில் தெரிந்தது. கண்ணன் அர்ச்சுனனுக்குத் தேரோட்டினாலும் கர்ணனின் செயற்பாடுகளை கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தான். போரின் இறுதிக் கணத்தையே மாற்றி அமைக்கும் சக்தி கர்ணனுக்கு உண்டு என்பது மாயக் கண்ணனுக்குத் தெரியும்.

திடீரென தனது படைத்தளபதிகளுக்கு உத்தரவிட்டு விட்டு துரியோதனன் போர்புரியும் இடம் நாடி அவனைச் சந்திக்க கர்ணன் செல்வதை அவதானித்த அர்ச்சுனன் "கண்ணா இங்கே என்ன நடக்கிறது? ஏன் கர்ணன் தளபதிகளுடன் கதைத்தான், இந்தப் போர்க்களத்தில் இது நாள் வரை இப்படி நடந்தது இல்லையே? இங்கு என்ன நடக்கப்போகிறது? ஒரு பகுதியில் ஒன்று கூடும் தளபதிகளும் போர்வீரர்களும் என்ன செய்யப் போகிறார்கள் நீதான் கூறவேண்டும்" என்றான்.

"அர்ச்சுனா இந்தப் போர்க்களத்தில் ஒரு புதியவீர காவியம் அரங்கேறப்போகிறது. எமது சக்கரவியூகத்தினை உடைத்துக்கொண்டு கர்ணனின் மகரவியூகம் உள்நுழையப் போகிறது. அப்படி நுழைந்தால் இன்றுடன் இந்தப் போர் முடியும். அது மட்டுமல்ல பாண்டவப் படைகள் மொத்தமாக அழிந்து நாசமாக வேண்டியதுதான்'' "கண்ணா கடைசிவரை எங்களைக் காப்பேன் என்று சத்தியம் செய்தவன் நீ. நீதான். இதுநாள் வரையான எமது வெற்றிகளுக்கும் காரணம். உனது வழிப்படுத்தலிலேயே நாம் வென்றோம். இனிமேலும் எங்களையும் எமது படைகளையும் நீதான் காத்தருள வேண்டும்". அர்ச்சுனனின் வேண்டுதலில் ஒரு பதட்டம் நிலவியது. "பயப்படாதே அர்ச்சுனா, இது எனது யுத்தம். எனது யுத்தத்தையே நீங்கள் நடத்துகிறீர்கள். என் மூலம் நீ சிவனிடம் பெற்ற பாசுபதாஸ்திரத்தை ஒத்த கணையை அவர்கள் மீது அனுப்பு. வீரகாவியம் எழுத நினைத்து ஒன்றுகூடிய



கர்ணனின் படைகள் அழிந்து போகட்டும்''. கண்ணனின் வார்த்தைகளைக் கேட்டு தைரியப்பட்ட அர்ச்சுனன் சிவன் தனக்களித்த பாசுபதாஸ்திரத்தை ஒத்த மிகப்பயங்கர ஆயுதத்தை அவர்கள் மீது ஏவினான். தனது படைத் தளபதி களையும், படையினரையும் நோக்கி வரும் அர்ச்சுனனின் கணை தனது படையினரின் உடல்களை எரித்து கருக்கிவிடும் என்பது கர்ணனுக்குத் தெரிந்தது.


உடனே அவன் அசுவத்தாமனை அழைத்து அதற்கு எதிராக அவனிடம் உள்ள பாசுபதாஸ்திரத்தை ஏவும்படி கட்டளை இட்டுவிட்டு தானும் தனது கணைகளை ஏவினான். அசுவத்தாமனின் பாசுபதாஸ்திரத்திற்கும் கர்ணன் ஏவிய கணைகளுக்கும் தாக்குப் பிடிக்க முடியாத அர்ச்சுனனின் பாசுபதாஸ்திரத்தினை ஒத்த கணை திசைகளை மறந்து, காலங்களைக் கடந்து தீப்பொறிகளைக் கக்கியபடி வன்னிமண்ணின் மீது விழுந்து வெடித்தது. அதன் எரிகணை வீச்சு எங்கும்பரவி "வீரகாவியம்" படைக்கக்கூடி நின்ற வீரமறவர்கள் மீது வெடித்துச் சிதறியது. குருசேத்திரத்தில் விழவேண்டியது குருசேத்திரப்புரத்தில் விழுந்தது. ஒரு இனத்தின் விடியலை வேரோடு சாய்த்தது.

**ஆக்கியதும் நானே! அழித்ததும் நானே என்ற புன்னகையுடன் தனது விஸ்பரூபம் காட்டிநின்ற கண்ணன் மீது எங்கிருந்தோ பறந்துவந்த கல்லொன்று தாக்கி அவனது நெற்றிப்பொட்டில் இருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது.**

வீ.மைக்கல் கொலின்

நன்றி - மகுடம் சிறுகதைச் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காற்றினில் கலந்து

ஆசையால் சித்திரமொன்று
வரைகோடாய் காற்றினில்
தெரிந்திடா பதிவுக்காய்
தெரியாத சங்கதிகளுக்காய்

முளைகட்டும் புதிர்கள்
நிலத்தை குடைந்து
குழம்பி எழும்போது
வானில் வர்ணத்தில்
வானவில்லாய் நிறைந்து

உதைக்கும் வார்த்தை
உறவுக்காய் ஏங்கும்
இதுதான் எதுவென்று
தயங்க வைக்கும்
மேனிதனில் தழுவிய
காற்றின் அணைப்பால்

திருமலை சுந்தா

## நான்

என் ஜனன விதைகளில்
அடைந்து போயிருக்கிறது
அழுக்கு

ஓடும் மீன் ஓடி
உறு மீன் வரும்வரைக்
காத்திருக்கின்றேன்- நான்
களங்கமுற்ற கொக்காய்

என்னுள்
ஆசை விதைகளை
ஆலமாய் வளர்த்தி
விழுதுகளையும் வீழ்த்தியது
காமம்

பெண்ணே
என்னின் விழுதுகளை
ஒறுப்பதாயிருந்தால் விரும்பு
அல்லாவிடில்

நீயும் உறுமீனாய்.. .. ..
என் காத்திருப்புக்கள்
தொடரும்.

- மாயன் -



## விட்டேன்!

இலக்கியம் பயில நேரம்
இல்லையே - இல்லை ஐயா!
தலைக்குளும் ஏறிடாதாம்,
தாண்டினேன் எண்பதாண்டை!
கலக்குகின்றார்கள் ஆள்வோர்,
கற்பனை பறக்குதெங்கோ?
விலக்கவும் முடியவில்லை,
வெம்பிய வண்ணமுள்ளேன்!

நூலுண்டாம், பயில்வ தில்லை!
நுவல வாய்ப் பல்லுமில்லை!
கோலுண்டாம், வரைவதில்லை!
கூடுதல் நினைவுமில்லை!
காலுண்டாம் - நடையுமுண்டாம்!
கையுண்டாம் - தூக்கு முண்டாம்!
நாலெட்டுப் பத்தை யெல்லாம்
நான் கட்டித் தூக்கி விட்டேன்!

- தாமரைத்தீவான் -
ஈச்சந்தீவு - கிண்ணியா

## புனித நாள்!

மலையின் - மட்டின் மாந்தரே,
மற்றவையும் படியுங்கள் -
மலைமுரசு ம் படியுங்கள்,
மறந்திடாமல் வாங்குவீர்!

சனிக்கிழமை புனிதநாள்
தமிழை முரசு கொணருநாள்!
கனிவினோடும் வாங்குவீர்,
கற்று யாவும் அறிகுவீர்!

எவைகள் நமது தேவையோ?
என்ன என்ன வேண்டுமோ?
அவைகள் முரசில் உள்ளதாம்,
அறிதல் நமக்கு நல்லதாம்!

முடியின் வேந்தர் நாட்களில்
முரசறைந்தே சொல்லுவார்!
கடிதில் நல்ல செய்திகள்
காதில் ஏற்று மகிழுவார்!

## கலாசார சீரழிவுகள்



வடக்கின் வசந்தம்
குடை சாய்கிறது
வாடை வந்து
அலை மோதுகிறது!

குடா நாட்டில்
அடா வடிகள்
நடை போடுதல்
அடையாளம் காணாமல்
மறைந்தோடுது!

அதிகாரம் இரு பக்கம்
நடை பயிலுது
ஆனாலும் அணியாயம்
நடந்தேறுது!

பண்பாடு காக்கின்ற
வட பகுதியில் இன்று
கண்டபட்டுப் போனதோ
கலாசார சீரழிவுகள்!

சேனையூர் - மூதூர் கிழக்கு

# கோணேசர் கல்வெட்டு

பாகம் : 05

தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரத்திற்கும் திருகோணமலை கோணேசர் கோவிலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவ் இரண்டு கோயிலுக்கும் தல புராணமாக திருக்கோணேசல புராணம் இருக்கிறது. இப்புராணம் திருகோணமலை நகரச் சிறப்பு, தெய்வீக அருள் சிறப்பு, இயற்கை வளம் பற்றியெல்லாம் கூறுகின்றது.

அத்துடன் திருக்கோணேசல புராணத்தில் தம்பை நகர்ப் படலம் என்ற அதிகாரத்தில் தம்பை நகரின் வளச்சிறப்பு, தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரத்தின் அருள் சிறப்பு போன்றவைகளை விபரமாகக் கூறுகின்றது. இந் நூலில் தம்பலகாமம் தம்பை நகர் என்று கூறப்படுகின்றது. திருக்கோணேசலப் புராணம் தம்பை நகர்




படலத்திலுள்ள ஒரு பாடல் பின்வருமாறு,

கரிய குவளை தளிர் மேய்ந்து
கடை வாய் குதட்டித் தேன் ஒழுக
எருமை கிடந்து மூச்செறியும்
எழிலார் தம்பை வள நாட்டில்

இவ் வர்ணணையை நோக்கும் போது தம்பலகாமமே ஊரடன் ஒத்திருப்பதைக் காணலாம். மேலும் தம்பை நகர் என்ற சொல்வழக்கு பழங்கால புராதன நூலான சரசோதிமாலை என்னும் நூலில் காணமுடிகின்றது.

'திருகோணமலை தெயவத்தன்மை வாய்ந்தது. திருகோணமலையின் நெற்களஞ்சியம் தம்பலகாமம் மருத நிலத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. என்று' பண்டிதமணி கணபதிப் பிள்ளையால் போற்றப்பட்ட பெருமைக்குரிய ஊராகத் திகழ்கின்றது.



குளக்கோட்டனால் பெரும் அளவில் திருப்பணிகள் செய்யப்பட்ட கோயில் திருகோணமலை கோணேசர் கோயில் எனினும் அவனால் கோணேசர் கோயிலுக்கு என வகுக்கப்பட்ட சட்ட திட்டங்கள் இன்றும் நடைமுறைப்படுத்தப்படும் இடம் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயம் ஆகும்.

போர்த்துக்கேய தளபதி கோணேசர் கோயிலை இடித்த பொழுது பூசகர்களும், பக்தர்களும் அக்கோயிலிலிருந்த விக்கிரகங்களை முடிந்தவரை மீட்டெடுத்து கிணறுகளிலும், குளங்களிலும் பிற இடங்களிலும் மறைத்து வைத்தனர். அதில் ஒரு விக்கிரகம் தம்பலகாமம் சுவாமி மலையில் வைத்து வணங்கப்பட்டது. அதுவே பின்னர் ஆதி கோணநாயகர் ஆலயத்துக்கு மாற்றப்பட்டது. 'கோணேசர் கல்வெட்டு' என்னும் நூலில் கூறப்பட்டுள்ள கோயில் நடைமுறைகள் யாவும் தம்பலகாமத்தில் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வருகின்றன.

கோயில் திருப்பணிகளை தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவன் குளக்கோட்டன். கோயிற் திருப்பணிகள் செய்து குடிகளைக்காத்த பெருமைக்குரிய மன்னனாகத் திகழ்கின்றான்.


கோணேசர் கல்வெட்டில் -
மாறாத புனல் பாயும் திருக்குளமும் வயல் வெளியும் வருந்திச் செய்தே
வீறாக என் மர போற்கு ஈயாமல் கோணமலை விமலர்க்கு ஈந்தேன்...

குறைவு படாமல் நீர்பாய்கின்ற திருக்குளமும், விளை நிலங்களாகிய வயல்வெளிகளையும் மிகவும் சிரமப்பட்டுச் செய்து என் குலத்தில் வருகின்ற பிற்சந்ததியினர்க்கு உரிமையாக்காமல் ஆக்கத்தோடும் பயபக்தியோடும் திருகோணமலை நாயகராகிய கோணேசப் பெருமானுக்கு அர்ப்பணித்து விட்டேன்.

சகல செல்வங்களுமுடைய பெரியோர்களே! இந்த திருக்குளத்துக்கு அழிவையும், வயல்வெளிகளைத் தாங்களே சுவீகரித்துக் கொள்ளும் பேராசையினால் கோணேஸ்வரத்துக்கு சேர வேண்டிய விளைவுகளுக்கும் அழிவையும் செய்ய நினைப்பவர்கள் தங்களது பெருமைகளெல்லாம் இழந்து சாம்பலாக போவது நிச்சயம் என்று ஆணை பிறப்பித்திருந்தான்.

கோணேசர் கோயிலுக்குத் தொழும்புகள் செய்பவர்கள் அவர்களுக்கு நியமம் பண்ணப்பட்ட தொழும்புகளை இறைவனுக்கு செய்து வருவார்களானால் குறைகளொன்று மின்றி நிறைவாக வாழ்வார்கள்.

அத் தொழும்புகளைச் செய்வது தங்களது கௌரவத்துக்கு குறைவென்று நினைத்து நாணப்பட்டாலும் அல்லது தங்களுடைய செல்வ மிகுதியினாலே செருக்கடைந்து கூலிக்கு ஆட்களை அமர்த்திச் செய்வித்தாலும் கோணலிங்கருடைய சாபத்தினால் செல்வத்தையும் இழந்து சந்ததியுமில்லாமல் துன்பப்பட்டு அலைவார்கள். கோணேசர் கல்வெட்டில் திருக்குளம் என்று கூறப்படுவது, இன்றைய கந்தளாய் குளத்தையே யாகும். மதகு அமைப்பு முறை, கால்வாய் அமைப்பு முறை என்பனவற்றை பார்க்கும் போதும் குளக்கட்டுக்குக் காவலாக அமைக்கப்பட்ட தெய்வங்களைப் பார்க்கும் போதும் இவ் உண்மை தெளிவாகின்றது. இக் குளத்தின் அமைப்பு



இன்றைய பொறியியல் நிபுணர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

குளக்கோட்டன் அநுராதபுர அரசி ஆன சௌந்தரியுடன் விவாக ஒப்பந்தம் செய்து கொண்டு அரசியின் துணையுடன் இங்கு கட்டிய பெரிய குளத்துக்குத் திருக்குளம் என்ற பெயரே வழக்கில் இருந்து வந்தது

தொடரும்..

எஸ்.பிரகாஷ் (MA)
ஆசிரியர்,
தி/ ... கல்லூரி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 6000 தியேட்டர்களில் 6 மொழிகளில்

இந்தியாவிலேயே முதன்முதலாக மோசன் கேப்சர் அனிமேஷன் தொழில்நுட்பத்தில் தயாராகி உள்ளது இப்படம். சுமார் 150 கோடி ரூபாய் செலவில் தயாரகி உள்ள இந்தப்படத்தை ஈராஸ் இன்டர்நேஷனல் நிறுவனமும், மீடியா ஒன் குளோபல் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ளது.

பல்வேறு பிரச்னைகளால் இப்படம் ரிலீஸ் ஆவதில் அடிக்கடி தாமதம் ஏற்பட்டது. இதுவரை இப்பட ரிலீஸ் 6 முறை தள்ளிப்போய் உள்ளது. இந்நிலையில் வருகிற மே 23ம் தேதி படம் ரிலீஸ் ஆவது உறுதி செய்யப்பட்டு, அதற்கான வேலைகளும் பரபரப்பாக நடந்து வருகிறது. தமிழ், தெலுங்கு உள்ளிட்ட 6 மொழிகளில் உலகம் முழுக்க சுமார் 6000 தியேட்டர்களில் கோச்சடையான் வெளியாக இருக்கிறது.

## அதிர வைத்த பேட்டி



சீனாவில் பல திரைப்படங்கள் மற்றும் நாடகங்களில் நடித்து பெரும்புகழ் பெற்றுள்ள நடிகர் Huang Haibo இன்று அதிரடியாக கைது செய்யப்பட்டார். அவர் பணத்திற்காக பணக்கார பெண்களுடன் விபச்சாரம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இதுகுறித்து சமூக வலைத்தளங்களில் மிகவும் பரபரப்புடன் பேசப்பட்டு வருகிறது. இந்த கைது சம்பவத்திற்கு கருத்து தெரிவித்த பலர் ஆண் ஒருவர் அதிலும் நடிகராக இருப்பவர் விபச்சாரம் செய்வதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை என்று ஆயிரக்கணக்கானோர் கூறியுள்ளனர்.

இதுகுறித்து சீனாவின் பிரபல நடிகையும், கைது செய்யப்பட்ட நடிகரின் முன்னாள் காதலியுமான Mo Xiaoqi கருத்து தெரிவிக்கையில், "Huang Haibo திருமணமாகாதவர். திருமணத்திற்கு முன்பு விபச்சாரம் செய்வதில் தவறு ஒன்றும் இல்லை. இந்த சம்பவத்தை பொதுமக்கள் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கூறியுள்ளார்.




## களமிறங்கும் ஷோபி

எனக்குள் ஒருவன், இதுநம்ம ஆளு போன்ற பல திரைப்படங்களில் நடித்த நடிகை ஷோபனா, ஒரு பரதநாட்டிய கலைஞர் என்பது அனைவரும் அறிந்ததே.

கோச்சடையான் திரைப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்துள்ள ஷோபனா, சமீபத்தில் ஒரு திடுக்கிடும் முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. ஷோபனா பரதநாட்டியத்தில் இருந்து ஓய்வு எடுக்கப்போவதாகவும், மீண்டும் சினிமா வாய்ப்பை தேடுவது மற்றும் ஓய்வு நேரங்களில் குடும்பத்தினர்களுடன் சந்தோஷமாக பொழுதை போக்குவது என முடிவு செய்துள்ளாராம்.

## அவமானத்தில் நடிகை



பிரான்ஸ் நாட்டில் நடந்த கேன்ஸ் திரைப்பட விழாவில் பங்கேற்க சென்ற கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தின் நாயகி விசாகா சிங் அவமானப்பட்டு திரும்பி வந்துள்ளார்

கேன்ஸ் படவிழாவிற்கு சென்ற விசாகா சிங், சிவப்பு கம்பள வரவேற்பு வழியாக சென்றபோது, ஹாலிவுட் புகைப்பட கலைஞர்கள் விசாகா சிங்கை வளைத்து வளைத்து புகைப்படம் எடுத்தனர். தன்னுடைய புகழ் ஹாலிவுட் வரைக்கும் பரவியுள்ளதா என ஆச்சரியத்துடன் போட்டோகிராபர்களுக்கு விதவிதமான போஸ் கொடுத்து கொண்டிருந்த விசாகா சிங், திடீரென புகைப்பட கலைஞர்கள் தன்னை விட்டு அகன்று சென்றதை பார்த்தார்.

அப்போதுதான் அவருக்கு புரிந்தது போட்டோகிராபர்கள் உண்மையின் தன்னை மெக்சிகோ நடிகை சல்மா ஹெய்க் என தவறாக நினைத்து புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தனர் என்பது.

## இதையும் திருடுவார்களா!

அஞ்சான் படப்பிடிப்பில் கலந்துகொண்ட சமந்தா, சூர்யாவுடன் குட்டைப்பாவாடை மற்றும் மேலாடை அணிந்து பாடல் காட்சியில் நடித்தார். பின்னர் அடுத்த காட்சிக்காக ஜீன்ஸ் மற்றும் டீ-சர்ட் அணிந்து அடுத்த காட்சியில் நடித்தார்.



பின்னர் படப்பிடிப்பு முடிந்து மீண்டும் பிரத்தியேக அறைக்குள் சென்றபோது, முதலில் அணிந்து நடித்த ஆடைகள் திருடு போயுள்ளதை அறிந்து கடும் அதிர்ச்சி அடைந்தார். அதுமட்டுமின்றி அவரது உள்ளாடைகளும் திருடப்பட்டுள்ளன. படக்குழுவினர்களுள் ஒருவர்தான் இந்த வேலையை செய்திருக்கவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. இந்த திருட்டு சம்பவத்தால் இயக்குனர் லிங்குசாமி அதிர்ச்சி அடைந்துள்ளார்.

# சினிமுரசு

## சினிமா குறுந் செய்திகள்



- **இயக்குனர்கள் அனைவரும் என்னை கர்ப்பிணியாக்குவதிலேயே குறியாய் இருக்கின்றனர்.**

3 idiots படத்தில் கர்ப்பிணியாக நடித்த மோனாசிங்கிற்கு அதன்பிறகு வந்த அனைத்து வாய்ப்புகளும் கர்ப்பிணி வாய்ப்புகளாகத்தான் வந்ததாம். உங்களை பார்த்தாலே எல்லோருக்கும் 3 இடியட்ஸ் படத்தில் நடித்த கர்ப்பிணி வேடம்தான் ஞாபகம் வருகிறது. எனவே கர்ப்பிணி வேடத்தில் நடிக்க வாருங்கள் என்று பல இயக்குனர்கள் கேட்கின்றனராம்.

- **சல்மான் கான் கைதாகுவாரா!!**

மது போதையில் விபத்தை ஏற்படுத்திய வழக்கில் சாட்சியங்கள் யாவும் சல்மான்கானுக்கு எதிராக இருப்பதால், அவருக்கு பத்து வருட சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அவர் சிறைக்கு சென்றால் சுமார் 500 கோடி மதிப்புள்ள திரைப்படங்கள் முடங்கும் நிலை உள்ளது.

- **ஒரே நாளில் பிரபலமானார்**

டாப்சி நடித்த பாடி ஸ்பிரே விளம்பரம் ஒன்று வெளியான ஒரே நாளில் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

- **சந்தானம் கொடுத்த சக்சஸ் பார்ட்டி**


கரீனா கபூர், பெண் வேடமணிந்த கணவர் படத்தின் நாயகி தமன்னாவை விட அழகாக இருக்கின்றாரே என்றும் இவரை போன்ற ஒரு செக்ஸியான பெண்ணை இதுவரை நான் பார்த்ததில்லை என்று கூறி உள்ளார்.

- **தமன்னா அரசியலில் குதிப்பாரா?**

விழாவில் மேனகா காந்திக்கு அருகில் அமர்ந்திருந்த ஹீரோயின் தமன்னா, அவர்களின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

## வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

திரை விமர்சனம்



ஒரு வலுவான திரைக்கதை அமைப்புள்ள படமாக மட்டும் இது இல்லையென்றால், தேர்தலில் மாட்டிக் கொள்ளாத வடிவேலு ஆகியிருப்பார் சந்தானம்.

தெலுங்கு படங்களுக்கேயுரிய பரம்பரை பகையும், கொலை வெறியில் தெறிக்கும் சிகப்பு சட்டினியும்தான். சந்தானத்தின் அப்பாவான போஸ் வெங்கட், அவரது சின்ன மச்சானை வெட்டிக் கொன்று விடுகிறார். பகை தீர்க்க நினைக்கும் கொலையுண்டவரின் அண்ணன், தனது வாரிசுகளிடம் 'அவனோட குடும்பத்துல எவன் உயிரோட இருந்தாலும் போடணும்டா' என்று சத்தியம் வாங்கிக் கொள்கிறார்.

இந்த பிளாஷ்பேக் அறியாத போஸ் வெங்கட்டின் மகனான சந்தானம் வளர்ந்து பெரியவனாகி அந்த ஊருக்கு வர, கதாநாயகியின் அப்பாதான் தன்னை காவு கொடுக்க கிளம்பியிருக்கிறார் என்பது புரிகிறது.

அதற்குள் ஆடு சம்பந்தப்பட்டவரின் வீட்டு பட்டியிலேயே அடைபட, வீட்டை விட்டு வெளியே வந்தால் தனக்கு ஆபத்து என்பதை புரிந்து கொள்கிற சந்தானம் எப்படி தப்பித்தார்?

விறுவிறுப்பான பிளாஷ்பேக். அதற்காக டாடா சுமோவெல்லாம் ஒரு சைக்கிளை முந்த முடியாமல் தவிப்பதெல்லாம் ஓவர்டா உலகநாதா.



நடுநடுவில் ஹீரோயினுடன் ரொமான்ஸ். சந்தானம் பீர் நுரையை போல பொங்க பொங்க நடித்திருக்கிறார் என்பதையும் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

அந்த வீட்டிற்குள் சிக்கிக் கொண்டோம், தப்பிப்பதற்குள் தலைக்கு பாதுகாப்பில்லை என்பதை அறிந்த பின் அவர் காட்டும் திகில் முகம் பரிதாபம். தன்னைதான் ஹீரோயின் காதலிக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் இவர் ஒன்று சொல்ல, அவர் ஒன்று நினைக்க, க்ளைமாக்சில் உண்மை புரிந்து சந்தானம் எடுக்கிற முடிவுக்கு மொத்த தியேட்டரும் எழுந்து நின்று கைதட்டும். சோறு போட்டு சுளுக்கெடுக்கிற ஸ்டைலை நினைத்தாலே குலை நடுங்குகிறது. முதல் காட்சியிலேயே இந்த பேமிலி இப்படிதான் என்றும் காட்டி விடுகிறார்களா? திகிலோடு நகர்கிறது இவர்கள் சம்பந்தப்பட்ட காட்சி அத்தனையும்.

ஷக்தி, ரிச்சர்ட் எம் நாதனின் ஒளிப்பதிவு பளிச்சென இருந்தாலும், மூடுக்கேற்ப விழிகளை ஓப்பன் செய்திருக்கிறது. சித்தார்த் விபின் பாடல்கள் ரிப்பீட் ரகம்.

**நல்லவனுக்கு அழகு சொல்லாம கிளம்புறது. வல்லவனுக்கு அழகும் அதேதான்!**

## ஸ்ருதியின் மர்மம் என்ன?



பூஜை படத்தில் போலீஸ் அதிகாரியாக நடிக்கிறார் விஷால். அதுவும் என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்டாக நடிக்கிறாராம். இந்த படத்தில் ஸ்ருதிஹாசன் கோயமுத்தூர் சிட்டி கேர்ளாக நடிக்கிறார். கொஞ்சம் கவர்ச்சி அதிகம் தேவைப்படும் என ஹரி தயங்கி ஸ்ருதியிடம் கூறியபோது, நோ பிராப்ளம் என சொல்லியிருக்கிறார்.

ஸ்ருதியுடன் மிக நெருக்கமாக நடிக்க விஷால் தயங்கி வருவதாக கூறப்படுகிறது. மற்ற நடிகைகளுடன் நெருக்கமாக நடிக்கும்போது புகுந்து விளையாடும் கோலிவுட் ஹீரோக்கள் ஸ்ருதியிடம் மட்டும் தயங்குவது விளங்காத மர்மமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Twitch ஐ வாங்குமா You tube

Youtube இணையதளத்திற்கே சவால் விடும் வகையில் இணைய உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் Twitch, 2011ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6ஆம் தேதி Justin.tv என்ற நிறுவனத்தின் உரிமையாளர்களான Justin Kan மற்றும் Emmett Shear என்பவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

அலெக்சா பட்டியலில் உலக அளவில் 252வது இடத்தை பெற்றிருக்கும் Twitch, இணையதளத்திற்கு மாதம் ஒன்றுக்கு 43 மில்லியன் பார்வையாளர்கள் வருவதாக Google Analaytics ஆதாரத்துடன் தெரிவித்துள்ளது.

தற்போது இந்த இணையதளத்தை Youtube விலைக்கு வாங்குவதற்காக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. சுமார் $1 பில்லியன் வரை இந்த இணையதளத்திற்கு விலை பேசப்பட்டு வருகிறது. ஆனால் இன்னும் பேச்சுவார்த்தை முடியவில்லை என Twitch, இணையதள நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டுப் பையன்

## 2 மணியில் அதி வேகம்



உலகின் மிக அதிவேக சைக்கிள் ஒன்று தற்போது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சைக்கிள் இன்னும் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வரவில்லை எனினும் சாலையில் செல்ல அனுமதி பெற்றுள்ளது.

எலக்ட்ரிக் சைக்கிள் எனப்படும் இந்த சைக்கிளில் உள்ள பேட்டரியை இரண்டு மணிநேரம் மட்டும் சார்ஜ் செய்தால் போதும். இரண்டே மணி நேரத்தில் 50 மைல்கள் செல்லும் திறன் கொண்டது. வெறும் 80 கிலோ எடையுடைய இந்த சைக்கிள் விரைவில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சூரிய ஒளி டீ-சர்ட்


புறஊதா கதிர்கள் செறிவூட்டிய மை பயன்படுத்தி உருவாக்கப்பட்டு உள்ள இந்த டி சர்ட் சூரிய வெளிச்சம் நேரடியாக பட்டால் அதன் நிறம் மாறும்.

கறுப்பு மற்றும் வெள்ளை நிற படங்கள் அனைத்தும் சூரிய வெளிச்சத்தில் படும்பொழுது, நிறம் மாறும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இதற்காக வடிவமைப்பாளர்கள் மேற்கொண்ட முயற்சியினால் இதுவரை 7 வடிவங்களில் ஆடைகள் விற்பனைக்கு தயாராக உள்ளன.

இந்த ஆடைகள் கடந்த 9ம் திகதி முதல் 12ம் திகதி வரை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற பீரீஸ் கலை திருவிழாவில் காட்சிக்கு வைக்கப்பட்டது.



## Computer crash ஆனால்??



இதைத்தான் Blue Screen of Death என்று கம்ப்யூட்டர் மொழியில் சொல்வார்கள்.


**ஹார்ட்வேர் பிரச்சினை**

ஒவ்வொரு சாதனமும் ஒரு வழியை மேற்கொண்டு அதன் மூலம் தன் இயக்கத்தை மேற்கொள்ளும். பொதுவாக ஒரு கம்ப்யூட்டரில் இத்தகைய வழிகள் குறைந்த பட்சம் 16 இருக்கும். இதில் ஒரே வழியை இரு சாதனங்கள் (பிரிண்டர், கீ போர்டு/ மவுஸ்) எடுத்துக் கொள்ளும்போது இயக்கம் நின்று போகும். இவ்வாறு ஏற்படுகையில் Start =, Settings =, Control pannel =, System =, Device Manager எனச் சென்று பார்த்தால், பிரச்சினை ஏற்பட்ட சாதனத்தின் பெயர் ஒரு மஞ்சள் நிற ஆச்சரியக் குறி தோன்றும். டிவைஸ் மேனேஜரில், கம்ப்யூட்டர் என்பதில் கிளிக் செய்து பார்த்தால், இந்த சேனல் வழிகளுக்கான ஐ.ஆர்.க்யூ எண் காட்டப்படும். ஒரே எண் இருமுறை இருப்பின் பிரச்சினை அங்குதான் உள்ளது என்று பொருள். பிரச்சினைக்குரிய சாதனத்தை அன் இன்ஸ்டால் செய்து மீண்டும் இன்ஸ்டால் செய்தால் போதும்.



**ரம் மெமரி சிப்ஸ்**

ராம் மெமரியை உயர்த்துவதற்காகப் புதிய ராம் சிப் ஒன்றை இணைத்திருப்போம். ஆனால் ஒன்றுக்கொன்று வேறுபாடான வேகம் உள்ளவையாக அவை இருக்கலாம். அவற்றிற்கிடையே இணைந்து செல்லும் நிலை ஏற்படாத போது Fatal Exception Error ஏற்படலாம். பயாஸ் செட்டிங்ஸ் திறந்து, ராம் wait state நிலையைச் சற்று உயர்த்தலாம். அல்லது ஒரே மாதிரியான வேகத்தில் இயங்கும் சிப்களை அமைக்கலாம்.



**ஹார்ட் டிஸ்க் டிரைவ்**

தேவையற்ற தற்காலிக பைல்கள் தேங்கும். பைல்கள் சிதறியபடி சேமிக்கப்படும். அப்போது கிராஷ் ஆக வாய்ப்புண்டு. எனவே அடிக்கடி ஹார்ட் டிஸ்க்கினைச் சுத்தப்படுத்த வேண்டும். இதற்கு டிபிராக் செய்திட வேண்டும். சி டிரைவில் தங்கும் தேவையற்ற பைல்களை அதற்கான புரோகிராம்கள் கொண்டு நீக்கலாம்.

## கவர்ந்திழுத்த சிலை



நகர மத்தியில் அமைந்துள்ள தாலேபஸ் எனப்படும் சிலையொன்றின் அந்தரங்க பகுதியில் தேனீக்கள் மொய்த்து கொண்டிருந்ததால் பொதுமக்கள் பதற்றமடைந்த சம்பவமொன்று லண்டனில் இடம் பெற்றுள்ளது. இந்நிலையில், பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சிலையை பார்வையிடுவதற்காக வந்த மக்களை சிலை இருந்த பகுதிக்கு செல்லவிடாமல் தடுத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த தேனீக்களை தேனீக்கள் வளர்க்கும் ஒருவர் வந்து எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஒரு கொலையின் கதை

2-13

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... 'கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

எனினும் அவள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அக்கணணியில் இருக்கும் எவற்றையும் அழிக்கவோ அல்லது அக் கணணியின் கடவுச்சொல்லை மாற்றவோ முயற்சிக்கவில்லை.... அவ்வாறு ஏதேனும் செய்து அது காவல்துறைக்குத் தெரியவருமாயின் தானும் அக்குற்றச்சாட்டில் கைதாக நேரலாம் என்பதுடன் அவ்வாறு கைதானால் தனது குழந்தை யாருமின்றிப் போய்விடலாம் என்பதை அவள்......... (12)

........................................................................

தெரிந்துகொண்டிருந்தாள்.

பெண்குழந்தையொன்று தாய் இல்லாமல் யாரோ ஒருவருடைய அரவணைப்பில் வளர்வதென்பது எவ்வளவு கடினமானது என்பதை அவள் நன்றாக உணர்வாள். ஆகவே எது நடந்தாலும் தனது குழந்தையை நிர்கதியாக்கிவிட்டுப் போவதற்கு அவள் துணியவில்லை.

அதனால் அவள் அந்த மடிக் கணணியில் இருந்து எவற்றையும் அழித்துவிட முன்வரவில்லை. அம் மடிக்கணணியின் கடவுச்சொல்லைக் கூட அவள் தெரியப்படுத்தியதற்கு இரண்டாவது காரணம் தனக்கு அந்தக் கடவுச் சொல் தெரிந்திருந்தும் புலனாய்வாளர்களிடம் தெரிவிக்கவில்லை என்ற விடயம் பின்னர் அவர்களுக்குத் தெரியவரும் பட்சத்தில் தனக்கு உண்மையிலேயே தெரியாத விடயங்கள் கூடத் தெரிந்திருக்கலாம் என்ற சந்தேகத்துடன் புலனாய்வாளர்கள் தன்னைக் கைது செய்து உரிய முறையில் விசாரிக்கத் துணியலாம் என்ற முன்னுணர்வே........ அவளது வார்த்தைகளில் இருந்து கடவுச் சொல் சில எண்களாக வெளிவிழுந்தது.

அவ்வெண்களைத் தனது குறிப்பேட்டில் எழுதிக்கொண்ட புலனாய்வாளருக்கு அவ்வெண்கள் ஏதோவொரு முறையில் தனக்குப் பரிச்சயமானவையாக இருந்தது புரிந்தது..... என்ன எண்கள் அவை... எவ்வாறான தாயஇலங்கங்களை அவை கொண்டுள்ளன என அவர்கள் சிந்தித்த போதுதான் அந்த எண்கள்.... எந்த விதமான மயக்கமும் இல்லாமல் இருவரது பிறந்த திகதிகள் மற்றும் மாதங்களின் கோவையாக இருந்தது தெரிந்தது.....

அந்த இருவரில் ஒருவர் அலிக.....

அவன் தனது பிறந்த திகதியையும் மாதத்தையும் கடவுச் சொல்லின் முதல் நான்கு இலக்கங்களாகப் பதிவு செய்திருந்தான்..... அடுத்த நான்கு இலக்கங்களும்??? .... அவனுடைய மனைவியினது இல்லை.... அவனது குழந்தையினதும் இல்லை...... அந்த நான்கு இலக்கங்களும்.....

......... ......... .........

இரண்டாவது புலனாய்வு அணி டொடியின் வீட்டை நோக்கிப் பயணித்திருந்தது.

டொடி திருமணம் ஆகாத ஒரு தனி நபராக இருந்ததால் அவனது வீட்டில் அவ்வளவாகப் பொருட்களில்லை என்பதைப் புலனாய்வாளர்கள் அவன் கைது செய்யப்பட்ட பின்னர் அவ் வீட்டைக் காப்பிட்டபோதே அவதானித்து இருந்தனர்.

எனினும் அவ்வீட்டினுள்ளும் இக் கொலை தொடர்பாக ஏதாவது தடயங்கள் கிடைக்கும் என்பதில் அவர்கள் சிறிதளவேனும் சந்தேகமறத் தெரிந்திருந்தார்கள்.

அத்துடன் டொடி தனிப்பட்டவனாக இருந்ததால் அவனது தொடர்புகள் எங்கு அதிகமாக இருந்தன என்பதை அவர்களின் புலனாய்வு அணிகள் தொடர்ச்சியாக விசாரித்து தெரிந்து கொண்டன... அந்தத் தொடர்புகளில் ஒரு தனி நபரும் ஒரு தொடர்பாடல் நிலையமும் முக்கிய இடம் பெற்றிருந்தன.....

அவ்விரண்டிலும் புலனாய்வாளர்கள் தமது கவனத்தைத் திருப்ப முன்னர் டொடியின் வீட்டை சல்லடையிடத் தீர்மானித்திருந்தனர்.

டொடி அந்த வீட்டிற்கு வந்து ஓரிரு மாதங்களே ஆகின்றன என்பதையும் அதற்கு முன் குறிப்பிட்ட அந்தத் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு அருகிலுள்ள அறையொன்றிலே வசித்து வந்தான் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

டொடியின் வீட்டின் காப்பை அகற்றும் போது அவ் வீட்டின் உரிமையாளரையும் அவ்விடத்திற்கு வருமாறு புலனாய்வாளர்கள் பணித்திருந்தனர்.

அவருக்கு முன்பாக அவ்வீட்டின் காப்பு அகற்றப்பட்டது.

வீடு ஒரு அறை மற்றும் சமையலறையைக் கொண்ட மிகச் சாதாரண வீடாக இருந்தது. சமையலறையில் தேநீர் தயாரிப்பதற்கான பாத்திரங்கள் மட்டுமே காணப்பட்டன. அவையும் எவ்வித ஒழுங்குமின்றி ஆங்காங்கே எறியப்பட்டுக் கிடந்தன.

படுக்கையறையில் ஒரு மடிக்கக்கூடிய கட்டிலும் அதன் கீழ் பழைய பெட்டியொன்றில் உடுப்புக்களும் கொடியொன்றில் மேலும் சில உடுப்புக்களும் இருப்பதைப் புலனாய்வாளர்கள் தமது முதலாவது பார்வையில் பொருத்திக் கொண்டனர்.

அந்த முதற்பார்வையில் இருந்த பொருட்களுள் ஏதோவொரு தடயம் அவர்களுக்காகக் காத்திருப்பதாக அவர்களது உள்ளுணர்வுகள் அடித்துக் கொண்டன....

தற்போது தமது கையுறைகளை சற்று இறுக்கிக் கொண்டு ஒவ்வொரு பொருட்களாக தமது விருப்பத்திற்கேற்பப் பரிசோதித்துப் பதபாதகமான ஒழுங்கில் அங்கு வைக்கத் தொடங்கினர்.... சமையலறையில் எதுவுமேயில்லை...கறைபடிந்த காலி தேனீர்கோப்பைகள்.... கொத்துரொட்டியின் மீத எச்சங்கள்..... முழுவதும் அருந்தப்படாத தண்ணீர்க் கோப்பைகள்........ அவை தவிர எதுவுமில்லை....

படுக்கையறைக்குட் செல்லும் போதே இருவரும் தங்களுக்குள் சம்பாசித்துக் கொண்டனர். முதலில் கொடியில் தொங்கிய ஒவ்வொரு உடைகளாக அலசத் தொடங்கிய அவர்களுக்கு அங்கு எவ்வித விடயங்களும் கிடைக்காது ஏமாற்றம் அளித்தது.


அடுத்து படுக்கையைப் பிரட்டிப் பதபாதகமாகப் பரீட்சித்த போதும் எதுவும் அங்கு கிடைக்கவில்லை.... எஞ்சிக் கிடந்தது இன்னும் ஒரு உடுப்புப் பெட்டிதான்....

அதை இழுத்தெடுக்க விரும்பாமல் முதலில் படுக்கைக் கட்டிலை மெதுவாக மடித்து மூலையொன்றில் சாய்த்து வைத்து விட்டு அந்தப் பெட்டியை திறந்தபோதே.......... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல்

# "முயற்சியும் சம்பாத்தியமும்"



(வி.என்.சந்திரகாந்தி)

சம்பாதித்தல் என்பது இன்று தனிமனிதர்களுக்கு மட்டுமன்றி நிறுவனங்களுக்கும் பெரும் சவாலாக மாறிவிட்டது.!

சம்பாத்தியத்தை அதிகரிப்பதற்கு முயற்சியை அதிகமாக முன்னெடுத்தல் ஒன்றே வழி என்பதை மக்கள் அனைவருமே அறிவர்.

சம்பாத்தியமானது ஒருவரின் வாழ்கையை மிகவும் மேலோங்க செய்யும். அவரவரது மனைவி, பிள்ளைகளை சமூகத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கும். மனைவி நல்ல ஆடைகளை அணிவதையும் தத்தம் பிள்ளைகள் உயர்கல்வி பெற்று சமூகத்தில் வைத்தியராகவோ பொறியியலாளராகவோ சட்டத்தரணியாகவோ உயர்வதனை எவர்தான் விரும்பமாட்டார்?

முயற்சியூடான சம்பாத்தியம் வாயிலாக நிலம், இல்லம், வாகனம், மேலும் நகைகள் , கணனி , தொலைக்காட்சி சாதனம், சொகுசு தளபாடங்கள், குளிரூட்டிகள் என்று அனைத்தையும் பெற்றுவிட்டால் வாழ்கை சொர்க்கமே அல்லவா? அதற்காகவென்றே இன்று பலரும் வீட்டில் செயலற்றிருக்கும் தம் மனைவியரை அவளின் கல்வித்தகமைக்கு பொருந்தும் தொழிலுக்கு அனுப்ப மனம் ஒப்புகின்றார்கள். புதிதாக விவாகமாகும் இளைஞர்கள் , தொழில்புரியும் யுவதிகளை தெரிவுசெய்கிறார்கள்.

ஒரு யுவதிக்கு தொழில் இல்லாவிட்டாலும் கூட அவளுக்கு பட்டப்படிப்பு இருந்தால் நாளாவட்டத்தில் தொழில் வாய்ப்பு கிடைக்கும் என்பதை தெரிந்து கொண்டு இளைஞர்கள் படித்த பெண்ணை கேட்கின்றார்கள்.

தச்சுத் தொழில் , கட்டட வேலை , வெல்டிங் போன்ற பல துறைகளுக்கு இன்று தொழிற் கல்வி பயிலும் வசதிகள் உண்டு. இதற்காக வென்றே பல மாவட்டங்களிலும் தொழில்நுட்பகல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இன்று ஒரு மிக முக்கிய கல்வி நெறியாக "ஹோட்டல் முகாமைத்துவம்" பிரசித்து பெற்றுள்ளது. சுமையல்காரன் முதல் நிர்வாகி வரை மிக உயர்ந்த சம்பளத்தை பெறுகின்றார்கள்.

பல கஸ்டங்களுக்கு முகம் கொடுக்க தயாராக எமது இளைஞர்கள் கட்டார் மற்றும் அரபு நாடுகளுக்கு தொழில் தேடி செல்கின்றார்கள். எப்படியெல்லாம் முயற்சிகள் செய்து சம்பாதிக்கலாம் என்பதை தெரிந்துகொள்வதற்கு அப்பால் எவ்விதமான முயற்சிகளில் ஈடுபடகூடாது என்பதை எமக்கு உணர்த்தும் செயல்பாடுகள் நாளாந்தம் நடந்துகொண்டிருக்கின்றன...

பாதையில் அநாதரவாக செல்லும் பெண்களிடம் உந்துருளியில் சென்று நகைகள் கைப்பையை உருவிச் செல்லல்...

ஓடும் ரயிலில் கொள்ளையடித்துக்கொண்டு வெளியில் பாய்தல்

தனித்து விடப்படும் குழந்தைகளை ஏமாற்றி நகைகளை அபகரித்தல்.

காதலித்து விவாகம் செய்வதாக உறுதி மொழி வழங்கி பெண்கள் சொத்தை மடக்குதல்...

நகைக் கடை வங்கி போன்ற ஸ்தாபனங்களை உடைத்து நகை பணம் ஆகியவற்றை தம் வசப்படுத்தல்.

நடு நிசியில் வீடுகளுக்குள் புகுந்து குழந்தைகள் பெண்களை பணயம் வைத்தோ காயப்படுத்தியோ சொத்துக்களை அபகரித்தல்...

"கிரடிட்காட் "" மூலம் பணத்தை கொள்ளையிடல்

"ஏ.ரீ.எம்" இயந்திரத்தை தகர்த்து அதில் உள்ள பணத்தை எடுத்துச்செல்லல்.

இவையெல்லாம் தவிர்ந்த நேர்மையான முயற்சிகள் மூலம் பணத்தை சம்பாதிக்க வேண்டும். அதுவே வாழ்கையில் மகிழ்ச்சியையும் உயர்ச்சியையும் தரும்.

அறுபத்தியெட்டாம் ஆண்டு அரச சேவையில் இணைந்து தற்போது ஓய்வு பெற்ற நண்பர் ஒருவர் எனக்கு இருக்கின்றார். தனது சம்பளம் போதவில்லை என்பது அவரது தொடர்ச்சியான முறைப்பாடாக இருந்தது. அரச தொழில் புரிந்து கொண்டு வேறு சுய தொழில் எதுவும் செய்ய கூடாது என்று ஒரு நிபந்தனையுண்டு. ஐந்து வருடம் வெளிநாடு சென்று உழைக்க அனுமதியுண்டு. பின்னர் என்ன செய்வது..? தொடர்ச்சியாக முப்பது வருடம் வேலை செய்தால் தான் முழு பென்சன் பெறலாம். கதிரையில் இருந்து அல்லது சொகுசாக தொழில்பார்த்துவிட்டு கஸ்டப்பட்டு வேலைசெய்ய முடியாது" ஸ்டேடஸை"(Status) விட்டுக்கொடுக்கமுடியுமா? இப்படியெல்லாம் யோசித்து யோசித்து அவர் வயோதிபராகியது தான் மிச்சம்...

ஆரம்ப காலத்திலிருந்து அவருடன் அரச தொழில் புரிந்து இடையில் அதனை தூக்கி எறிந்து விட்டு அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரிந்த அவரது நண்பர் ஒருவர் நாற்பது வருடங்களுக்கு பின்னர் அவரை முகநூல் மூலம் தேடிக் கண்டு பிடித்து மனைவி பேரக்குழந்தைகளுடன் அவரை காண வந்திருந்தார் அவரது "காரின்" பெறுமதி மட்டும் பல மில்லியன் ரூபாவாகும்!

அதைத்தான் முயற்சியின் பலன் என்பது!

நன்றி.

## செய்தித் துளிகள்

# குச்சவெளியில் புதையல் தோண்டியோர் கைது

குச்சவெளி பகுதியில் புதையல் தேட முற்பட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 22ம் திகதி குச்சவெளி - இரணைக்கேனி செம்புமலை வனப்பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைந்து இவர்கள் புதையல் தோண்ட முற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வசமிருந்து பூசைப் பொருட்கள் மற்றும் புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் எரக்கண்டி, வாழைச்சேனை, வவுனியா மற்றும் உப்புவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் 23ம்திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதோடு, குச்சவெளி காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வறுமையில் வாடும் மேன்கமக் குடும்பத்திற்கு குணா கல்வி நிலையம் உதவி

கடந்த வார மலைமுரசில் பிரதான செய்தியாக வெளியாகிய வறுமையில் வாடும் மேன்கமக் குடும்பத்திற்கு திருகோணமலை குணா கல்வி நிலையத்தின் பணிப்பாளர் திரு. செல்வன் அவர்களும் அவரது மாணவர்களும் பேணும் அறநெறி நிதியில் இருந்து பிளாத்திக்குச் சாய்மனைக் கதிரையொன்றும் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியொன்றும் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

அவ்வுதவிகளைப் பெற்றுக்கொண்ட மலைமுரசின் ஆசிரியர் அப் பொருட்கள் உடனடியாகவே குறித்தவர்களைச் சென்றடைவதை உறுதிப் படுத்தியுள்ளார். அத்துடன் மாணவர்களின் இம்முன்மாதிரச் செயற்பாட்டை அவர் மனமுவந்து பாராட்டியும் உள்ளார். சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் ஊடாக அப்பொருட்கள் உரியவர்களைச் சென்றடைந்துள்ளன.

## கங்குவேலி அகத்தியர் வித்தியாலய மாணவருக்குச் கல்விக்கான சிறு உதவிகள்

கங்குவேலி அகத்தியர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பெறறோரற்ற மாணவர்களுக்கு மூதூர் இந்துக் குருமார் சங்கத்தினர் தமது நிதியில் இருந்து கல்வி நடவடிக்கைகளுக்காக உதவிகளை கடந்த 22ம் திகதி வழங்கியுள்ளனர்.

சுமார் இருபத்தியிரண்டு மாணவர்களுக்கான உதவியாக அப்பியாசக் கொப்பிகளை மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் தலைவர் பாஸ்கரன் தலைமையில் அங்கு பயணித்திருந்த சைவக்குருமார்கள் வழங்கி வைத்தனர்

# குறுக்கெழுத்து புதிர் 010

**போட்டி முடிவுத் திகதி : 29.05.2014**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ,
கட்றகரைக்காட்சி வீதி, திருகோணமலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | | 12 | ளி | | 21 | | | ■ |
| | ■ | | ■ | ■ | 11 | | | 15 |
| | 2 | | | | | 19 | 10 | 16 |
| 3 | | | | ■ | | | | |
| 22 | | 13 | 24 | 23 | | 18 | | |
| | 20 | | ■ | | ■ | | | |
| 4 | | | ■ | ■ | 9 | லா | | 17 |
| ■ | 5 ந | | ■ | 14 | | | ■ | |
| 6 | | | 7 | | | | ■ | 8 |

## இடமிருந்து வலமாக

1. இலங்கையில் காணப்படும் உயரமான மலைகளில் இதுவும் ஒன்றாகும்.
2. முடி சூடுபவர்களை இவ்வாறும் அழைப்பர் - குழம்பியுள்ளது.
3. இயேசுவின் பிறந்ததினம் கொண்டாடப்படும் மாதம்
4. துலக்கம் - ஒத்த கருத்துள்ள சொல்
5. கபடம் மிக்கவர்களை இவ்வாறும் கூறுவர்.
6. கோயில்களில் தொண்டு செய்வதை இவ்வாறும் அழைப்பர்.
7. பெண்களின் முகத்தில் எப்போதும் இருக்க வேண்டியது
8. ஒரெழுத்து தமிழ் சினிமா படத்தின் பெயர்
9. ஆடைகளை சலவை செய்யும் இடம் - குழம்பியுள்ளது.
10. இதனாலும் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகலாம்.
11. தெனாலிராமனில் வைகைப்புயல் அதிகம் பயன்படுத்தும் சொல்
14. தானிய வகைகளில் ஒன்று
22. நினைவாற்றல் கூடியது
24. நேரத்தைப் பார்த்து பார்த்து வேலை செய்தல்

## மேலிருந்து கீழாக

1. சிவனை வழிபடுபவர்
12. கும்கி நாயகனின் கதாபாத்திரம் எது
13. சீதா கானகம் செல்லும் போது இதைத் தரித்துச் சென்றாள்.
15. பாண்டவர் இவ்விளையாட்டினால் தோற்கடிக்கப்பட்டனர்.
16. .............. கண்டால் தூர விலகுதல் அவசியம்.
17. அர்ஜுனன் மகரவியூகத்தை தடுப்பதற்காக ஏவிய அஸ்திரத்தை யாரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.
18. முன்னைய கால கதைகளைப் பற்றிக் கூறுவது
19. .............. வரைபவர் கவிஞன் ஆவர்.
20. ஈரத்தைப் பற்றிக் கொள்ளக் கூடியது.
21. மரவள்ளி ஓர் நிலக்கீழ் தாவரம்
23. சிற்பி வடிப்பது
25. இவர் ஒரு இயக்குனர், நடிகர், தயாரிப்பாளர், மொத்தத்தில் ரஜினியுடன் வில்லனாக நடித்தவர்.

## குறுக்கெழுத்து புதிர் 009 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | லே | 16 சி | 17 யா | ■ | 18 சி | 2 து | ட் | 19 டு |
| ண் | ■ | 3 ல | து | க் | 20 க | ம் | ■ | 21 வ |
| டே | 4 அ | ம் | மா | ■ | 5 ண் | ம் | டூ | ர் |
| லா | ர | பா | 22 கி | ■ | 6 டி | ல் | 23 சா | ன் |
| 7 டி | வ | ட் | த் | 8 க | ளி | ம | ண் | ண |
| ■ | ம் | ட் | 9 து | டு | ப் | 10 பு | டி | ட் |
| 24 டை | ■ | ம் | ள் | க் | ■ | 11 இ | ல் | ■ |
| ட் | தி | ■ | 12 பா | க | ன் | 13 வை | ய | ம் |
| 14 அ | ர | வா | ணி | 15 ண் | க | ண | ன் | ■ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. நீரின் மூலம் பரம்பலடையும் பழம் எது?
    1. தேங்காய் 2. மரமுந்திரிகை 3. புலி நகம் 4. ஒட்டொட்டி

02. இலைகளைக் கொண்டிராத தாவரம்?
    1. திருவாச்சி 2. மணிவாழை 3. கற்றாளை 4. சதுரக்கள்ளி

03. கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வளரும் தாவரம் எது?
    1. கண்ணா 2. தாழை 3. மின்மினி மரம் 4. புண்ணைமரம்

04. கோழி முட்டையிலிருந்து குஞ்சு பொரிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
    1. 18 நாட்கள் 2. 19 நாட்கள் 3. 20 நாட்கள் 4. 21 நாட்கள்

05. உடல் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச் சோடி?
    1. பசும் பாலும், சக்கரைப் பொங்கலும்
    2. முட்டையும், கோதுமை ரொட்டியும்
    3. பயறும், சோயா அவரையும்
    4. சோயா அவரையும், பசளியும்

06. பூச்சியுண்ணித் தாவரங்கள் பூச்சிகளை பிடித்து உண்ணுவதற்கு காரணம்?
    1. தாவர உணவை உண்பதற்காக
    2. பூச்சி பீடைகளின் சேதத்தை குறைத்தல்
    3. பூச்சியை சமிபாடடையச் செய்து நைதரசனை பெற
    4. பூச்சிகளை பிடித்து உண்பதால் பூச்சிகளைக் கொல்லுதல்.

07. மின்னல் தாக்கம் அதிகளவு ஏற்படும் சந்தர்ப்பம்?
    1. வாகனத்தில் செல்லும் போது
    2. திறந்த மைதானத்தில் நிற்கும் போது
    3. பலகை இடப்பட்ட தரையில் நிற்கும் போது
    4. தார் வீதியில் செல்லும் போது

08. இலங்கையின் உயரமான இடத்தையும், தாழ்வான இடத்தையும் காட்ட பயன்படுத்தும் நியம நிறங்கள் எவை?
    1. நீலம், கபிலம் 2. கபிலம், பச்சை
    3. சிவப்பு, மஞ்சள் 4. பச்சை, கபிலம்

09. பின்வரும் எந்த இலையை புத்தகங்களுக்கு இடையே வைத்து சில நாட்களின் பின் அவதானித்தால் சிறிய தாவரம் துளிர்த்திருக்கும்?
    1. சதைக்கரைச்சான் 2. சேம்பு 3. நெருஞ்சி 4. ரோசா

10. மாலை வேளையில் இலைகள் உறக்கத்தில் காணப்படும் தாவர இலை யாது?
    1. நெருஞ்சி 2. புளி 3. காசித்தும்பை 4. ஈரப்பலா

11. ஒவ்வொரு 10 மீற்றருக்கும் ஒரு தூண் வீதம் நடப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் 20 தூண்கள் காணப்படின், முதலாவது தூணுக்கும், கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் யாது?

12. அனுலாவிடம் ரூபா 52 உம், சனுஜனிடம் ரூபா 42 உம் உள்ளது. இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாவதற்கு அனுலா, சனுஜனுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

13. பின்வரும் தொழில்களை செய்வதற்கு பொருத்தமான உபகரணத்தின் பெயரை தருக.
    1. சிறிய பொருளை ரெுப்பித்து பாதுகாப்பதற்கு ..............................
    2. கத்தியை தீட்டுவதற்கு ..............................
    3. தைக்கும் போது விரலின் பாதுகாப்புக்காக ..............................
    4. உளியை தீட்டுவதற்கு ..............................
    5. இரும்பாணியை கழற்றுவதற்கு ..............................

14. பின்வரும் பழமொழிக்கொத்த கருத்தைத் தரும் பழமொழி ஒன்றைத் தருக.
    1. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் ..............................
    2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை ..............................
    3. வல்லவனுக்குப் புல்லும் ஆயதம் ..............................
    4. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? ..............................
    5. எறும்பூரக் கற் குழியும் ..............................

15. 750 கி வாழைப்பழம் ரூ92 ஆயின், 1கி 250கி வாழைப்பழத்தின் விலை எவ்வளவு?

16. ஒரு விமானம் காலை 11.45க்கு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, 1 மணித்தியாலம் 20 நிமிட பயணத்தின் பின் இன்னொரு விமான நிலையத்தை வந்திறங்கியது. இவ்விமானம் வந்திறங்கிய நேரம் யாது?

17. பாடசாலை விளையாட்டு மைதானத்தின் ஒரு பக்க நீளம் 48மீற்றராகும். மைதானத்தின் முழு நீளத்திற்கும், 4 மீற்றர் இடைவெளியில் கொடிக்கம்பம் நடுவதற்கு எத்தனை கொடிக்கம்பங்கள் தேவை?

18. திவாசி என்பதை 836 எனவும், சிவாதியை 638 எனவும் மியாதியை 358 எனவும் எழுதினால், தியாமியை எவ்வாறு எழுதலாம்?



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## நன்றி மறப்பது நன்றன்று

குட்டிக் கதை


ஒரு பிச்சைக்காரன் உணவுக்காக ஒவ்வொரு வீடாகப் போய் பார்த்து விட்டு எதுவும் கிடைக்காவிட்டால் தனக்குள் அந்த வீட்டைப் பற்றி சொல்லிக் கொள்வான். ஒரு வீட்டின் முன்னே "வீடு மிகப் பெரியது. ஆனால் இங்குள்ளவர்களுக்குப் பணம் நிறைய இருந்தும் திருப்தி இல்லை. அவர்கள் எப்போதும் அதிகமாகவே எதிர்பார்க்கிறார்கள். கடைசியில் அவர்கள் பேராசையால் எல்லாவற்றையும் இழப்பார்கள்..."

இன்னொரு வீட்டிலும் உணவு கிடைக்கவில்லை. "இந்த வீட்டில் உள்ளவன் கோடீஸ்வரன். ஆனால் இருக்கிற பணத்தில் திருப்தியடையாமல் அவற்றை இரட்டை மடங்காக்க சூதாடினான். கடைசியில் எல்லாவற்றையும் இழந்தான். எனக்கோ கொஞ்சப் பணம் கிடைத்தால் போதும். திருப்தி கொள்வேன். அதிக ஆசைப் படமாட்டேன்!" என்று அந்த பிச்சைக்காரன் சொன்னதும் அதிர்ஷ்ட தேவதை அவன் முன்னே தோன்றியது.

"நான் உனக்கு உதவப் போகிறேன். நீ உன்னுடைய கோணிப்பையைப் பிடி. நான் அதனுள்ளே தங்க நாணயங்கள் போடுவேன். உனக்கு எவ்வளவு வேண்டுமோ பெற்றுக் கொள்".

பிச்சைக்காரன் அதிர்ஷ்ட தேவதையைப் பார்த்தான். அதன் கரங்களில் தங்க நாணயங்கள் நிறைய இருந்தன. உடனே அவன் கோணிப்பையை விரித்தான். அப்போது அதிர்ஷ்ட தேவதை சொல்லியது: "கோணிப்பைக்குள் விழுகின்ற நாணயங்கள் தங்கமாக இருக்கும். அவை நிலத்தில் விழுந்தால் தூசியாகி விடும். இது எனது எச்சரிக்கை..."

பிச்சைக்காரன் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான். பிச்சைக்காரனின் கோணிப்பைக்குள் தங்க நாணயங்களைக் கொட்டியது. கோணிப்பை நிரம்பியதும் தேவதை தங்க நாணயங்களைக் கொட்டுவதை



நிறுத்தியது. "உன் கோணிப்பையில் இருக்கிற நாணயங்கள் உன்னை அரசனை விட பணக்காரனாக்கும். அது போதும்தானே?" என்றது அதிர்ஷ்ட தேவதை. "போதாது. இன்னும் வேண்டும்" என்றான் பிச்சைக்காரன்.

அதிர்ஷ்ட தேவதை மேலும் சில தங்க நாணயங்களைக் கொடுத்து விட்டு சொன்னது, "உன் கோணிப்பை இதற்கு மேல் தாங்காது". பிச்சைக்காரன் சொன்னான்... "இன்னும் கொஞ்சம் வேண்டும்"...". அதிர்ஷ்ட தேவதை மேலும் தங்க நாணயங்கள் சிலவற்றைக் கொடுத்துவிட்டு நிறுத்தியது.

"உன் கோணிப்பை கிழியப் போகிறது...". பிச்சைக்காரன் மறுத்தான். "இல்லை... நீ இன்னும் கொஞ்சம் நாணயங்களைப் போடு! என் கோணிப்பை தாங்கும்..." மறு வினாடி கோணிப்பை கிழிந்தது. அதனுள் இருந்த நாணயங்கள் கீழே விழுந்து தூசியாகின. அதிர்ஷ்ட தேவதையும் மறைந்தது. பிச்சைக்காரன் திகைத்துப் போய் நின்றான்.

– பேராசை பெரு நட்டம் –



வ.பிரணவி
தரம் 03ஏ,
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி

## பேணுங்கள் !

உடலைப் பேணுங்கள் - பிள்ளைகாள்,
உளத்தைப் பேணுங்கள்!
கடமை முதல் என - நீங்கள்
கருதிக் கொள்ளுங்கள்!

தமிழைப் பேணுங்கள் - பிள்ளைகாள்,
தாயைப் பேணுங்கள்!
அமுதம் தந்தவள் - அவளை
அணைத்துக் கொள்ளுங்கள்!

தந்தை சொற்களை - நெஞ்சில்
தாங்கிக் கொள்ளுங்கள்!
எந்த நேரமும் - உளத்தில்
இருத்திக் கொள்ளுங்கள்!

ஆசிரிந்தவர் - பள்ளியில்
'அ' கரம் காட்டியோர்
ஈசன் போன்றவர் - அவரை
என்றும் எண்ணுங்கள்!



# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

புரியாததை புரிந்து கொள்ளுங்கள்:
புரிந்ததை பகிர்ந்து கொள்ளுங்கள்
வெற்றி நிச்சயம்

## திறமையுள்ள குழந்தைகள்



எந்தவிதக் கட்டாயத்தின் பேரிலும், மற்ற குழந்தைகளுடன் உங்கள் குழந்தைகளின் திறமையை ஒப்பிட்டு அவர்கள் முன் குறை சொல்லி விடாதீர்கள்.

பக்கத்து வீட்டு குழந்தைகள் பாடுவதில் கில்லாடியாக இருக்கலாம். உங்கள் குழந்தைக்கு பாடுவது சிரமமான காரியமாக இருக்கும். அதற்காக அந்த குழந்தையைப் போல் உங்கள் குழந்தையையும் பாட்டு கிளாசில் சேர்த்து அவர்களை சிரமப்படுத்தாதீர்கள்.

உங்கள் குழந்தை திறமையை வெளிப்படுத்தி பரிசு வாங்கி வரும்போது அவர்களை பாராட்டத் தயங்காதீர்கள். அதேபோல் தோல்வியடைந்தாலும் தட்டிக்கொடுத்து அடுத்த முறை நீதான் வெற்றி பெறுவாய் என்று ஆறுதலான வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்துங்கள்.

"வெற்றியும், தோல்வியும் வீரனுக்கு அழகு" என்று அவ்வப்போது உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுங்கள். "தோல்விகள்தான் வெற்றியின் படிக்கற்கள்" என்றும் எடுத்துக் கூறி உங்கள் குழந்தையின் மனதை இளமையிலேயே திடப்படுத்துங்கள்.

தன்னம்பிக்கையையும், வீரத்தையும் ஊட்டி வளர்க்கும் விதத்தில், ஜான்சி ராணி லெட்சுமிபாய், வீர்சிவாஜி போன்றவர்களின் வீரத்தைச் சுட்டிக் காட்டும் சம்பவங்களைக் கூறுங்கள். முற்றும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. நீளம் 215செ.மீ, அகலம் 142செ.மீ ஆகவுள்ள செவ்வக வடிவ மைதானத்தின் பரப்பளவையொத்த சதுர வடிவ மைதானத்தின் பக்க நீளத்தைக் காண்க.

02. குறித்தவொரு தினத்திலே மருத்துவமனைக்கு வந்திருந்த நோயாளர்களுள் 1/3 பங்கினர் ஆண்களாவர். எஞ்சியவர்களில் ¾ பங்கினர் பெண்களாவர். ஏனையோர் சிறுவர்களாவர். அன்றைய தினம் மருத்துவமனைக்கு வந்திருந்த சிறுவர்களின் எண்ணிக்கை 55 எனின், அன்றைய தினம் மருத்துவமனைக்கு வந்திருந்த
   1. நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   2. வந்திருந்த பெண்களின் எண்ணிக்கையைக் காண்க.
   3. ஆண்களின் எண்ணிக்கையைக் காண்க.

03. ஒரு தாங்கியில் 252.65லீ நீர் இருந்தது. மேலும் 105.45லீ நீர் ஊற்றப்பட்ட பின்னர் அத்தாங்கியிலிருந்து பாவனைக்காக 47.08லீ நீர் பெறப்பட்டதாயின், தற்போது தாங்கியிலுள்ள நீரின் கனவளவைக் காண்க.

04. முக்கோணி ABC யில் AB, AC யின் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். C யினூடாக AB யிற்கு சமாந்தரமாக வரையப்பட்ட கோடானது நீட்டப்பட்ட PQ வை R இல் வெட்டுகிறது. PB = RC என நிறுவுக.

05. பின்வருவனவற்றை மீளும் தசமங்களாக எழுதுக.
   1. 13/3  2. 2/7  3. 56/37  4. 10/11  5. 5/6

06. 21செ.மீ விட்டத்தைக் கொண்ட உருளை வடிவ திண்மமொன்றின் உயரம் 40செ.மீ ஆயின்,
   1. குறுக்கு வெட்டு முகங்கள் இரண்டினதும் பரப்பளவைக் காண்க.
   2. வளைந்த மேற்றளத்தின் பரப்பளவைக் காண்க.
   3. மொத்த மேற்பரப்பளவைக் காண்க.

07. வட்ட அடியின் பரப்பளவு $616cm^2$, ஆகவுள்ள திண்ம உருளை ஒன்றின் உயரம் 75cm எனின்,
   1. அதன் வட்ட அடியின் ஆரையைக் காண்க.
   2. வளைந்த மேற்பரப்பளவையும் மொத்த மேற்பரப்பளவையும் காண்க.

08. காரணியறிவைப் பயன்படுத்தி சுருக்குக.
   1. $77 \times 13 + 13 \times 23$  2. $87.8^2 - 12.2^2$  3. $199.3 \times 200.7$
   4. $130^2 - 195 \times 65$  5. $237 \times 25 - 37 \times 25$

09. பால் தயாரிப்பதற்காக பால்மா, சீனியின் நிறைகள் 4:5 என்ற விகிதத்தில் கலக்கப்படுகிறது. இவற்றின் விலைகளுக்கிடையேயான விகிதம் 11:5 ஆகும். 10லீ பால் தயாரிப்பதற்கு ரூ345 செலவாகிறது. 1கி.கி சீனியின் விலை ரூ 50 எனின்,
1. பால்மாவிற்கான செலவைக் காண்க. 2. சீனிக்கான செலவைக் காண்க.
3. கலக்கப்பட்ட சீனியின் நிறையை கி.கி இற் காண்க.
4. 1Kg பால்மாவின் விலையைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. தெறி வில்லின் கணத்தாக்கங்கள் செல்லும் சரியான பாதை யபது?
   1. இயக்கு நரம்புக்கலம் ⇨ புலன் நரம்புக்கலம் ⇨ விளைவு காட்டும் அங்கம்
   2. இயக்கு நரம்புக் கலம் ⇨ முண்ணான் ⇨ புலன் அங்கம்
   3. புலன் நரம்புக்கலம் ⇨ முண்ணான் ⇨ இயக்க நரம்புக்கலம்
   4. வாங்கி அங்கம் ⇨ இயக்கு நரம்புக்கலம் ⇨ புலன் நரம்புக்கலம்

2. இரு வித்திலைத் தாவரங்கள் காட்டும் ஓர் இயல்பு
   1. ஆணி வேர் உள்ள வேர்த் தொகுதி இருத்தல்.
   2. இலைகளில் சமாந்தரமான நரம்பமைப்பு இருத்தல்.
   3. முப்பாத்துத் திட்டம் உள்ள பூக்கள் இருத்தல்.
   4. பச்சையம் இல்லாமையால் பிறபோசணிகள் அல்லது அழுகல் தாவரங்கள் ஆகம்.

3. உணவிற்காக எடுக்கப்படும் ஓர் உப்பு மாதிரி உவர்ப்புச் சுவையைக் கொண்டிருக்கும் அதேவேளை வெளி படுமாறு திறந்து வைக்கப்படும் போது ஈரமாகியது. இந்த அவதானிப்புக்கள் பற்றிய சரியான விஞ்ஞான விளக்கம் யாது?
   1. NaCl உள்ளது: அது உருவாகியுள்ளது.
   2. NaCl உள்ளது: அது நீர்மயமாகின்ற இயல்பைக் கொண்டுள்ளது.
   3. $MgCl_2$ உள்ளது: அது உருவாகியுள்ளது.
   4. $MgCl_2$ உள்ளது: அது நீர்மயமாகின்ற இயல்பைக் கொண்டுள்ளது.

4. தைரொயிட்டுக்கு ஏதுவான சல்மோனெல்லா ரைபி என்னும் பற்றீரியா நோயாளியின் மலங்களினூடாகச் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றது. இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கு வழங்கப்படும் சில அறிவுறுத்தல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் விரிவாக நோய் பரவுவதைத் தடுப்பதற்கு நோயாளிக்கு வழங்க வேண்டிய மிக முக்கியமான அறிவுறுத்தல் யாது?
   1. சுகாதார மலகூடத்தைப் பயன்படுத்தல்
   2. மலகூடத்தைப் பயன்படுத்திய பின்னர் கைகளை நன்றாகச் சவர்க்காரத்தினால் கழுவுதல்.
   3. உணவை உட்கொள்ளும் முன்பாகக் கைகளை நன்றாகச் சவர்க்காரத்தினால் கழுவுதல்
   4. நன்றாகச் சமைக்கப்பட்ட உணவுப் பொருள்களை நுகர்தல்.

5. பகுதிகளாகப் பிரிக்கப்படாத மூளை, உடல், கல்சியம் காபனேற்றினாலான ஓடு ஆகியவற்றைக் கொண்ட ஓர் அங்கியில் காணத்தக்க வேறோர் இயல்பு எது?
   1. மூட்டுள்ள கால்கள் இருத்தல்  2. தரையில் மாத்திரம் வாழ்தல்
   3. உடலின் இரு முனைகளிலும் உறிஞ்சிகள் இருத்தல்
   4. தசையுள்ள பாதம் இருத்தல்

6. பின்வரும் எக்கோட்பாட்டைப் பயன்படுத்தி ஒளிப்பிரதியெடுக்கும் பொறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?
   1. மின்பகுப்பு  2. வெப்ப இடமாற்றம்  3. நிலைமின்னேற்றம்
   4. மின்னியக்கவியல்

7. நகப்பூச்சுகளை நீரினால் கழுவி அகற்ற முடியாது. ஆனால் மெலிதாக்கி என்னும் கரைப்பானைப் பயன்படுத்தி அவற்றை எளிதாக அகற்றலாம். இதற்கேற்ப அவற்றில் எவை சம முனைவியல்புகளைக் கொண்டுள்ளனவென முடிவு செய்யலாம்?
   1. நீரும் நகப் பூச்சும் மாத்திரம்  2. நீரும் மெலிதாக்கியும் மாத்திரம்
   3. மெலிதாக்கியும் நகப் பூச்சும் மாத்திரம்
   4. நீர், மெலிதாக்கி, நகப்பூச்சு ஆகிய மூன்றும்

## பாடம் : வரலாறு

01. தூது விடு இக்கிய காலம்
   1 .கம்பளை  2. குருணாகல்  3. கண்டி  4. கோட்டை

02. இந்தியாவில் டில்லி சுல்தான் ஆட்சியின் வீழ்ச்சிக்கு காரணமான வம்சம்
   1. லோடி 2. அடிமை  3. துக்ளக்  4. செய்யது

03. இந்தாவில் ஜெசியா வரி என்பது
   1. யூதர் ,கிறிஸ்தவ, இந்து மக்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட வரி
   2. மசூதி,ஆலயங்களின் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரி
   3. மன்னர்களின் அரச மாளிகைக்கு சேர வேண்டியவ வரி
   4. வர்த்தம் மீது விதிக்கப்பட்ட வரி

04. இப்ராஹிம் லோடியை தோற்கடித்து மொகலியப் பேரரசை நிறுவிய மன்னன்
   1. அக்பர்  2. பாபர்  3. சாஜகான்  4. 2ம் பகதூர்சா

05. சீனரின் பிரதான மதம் அல்லாதது
   1. கொன்பியூஸியஸ்  2. தாவோ  3.பௌத்தம்  4. சின்டோ

06. அங்கோர்வாட் விகாரை காணப்படும் இடம்
   1. கம்பூச்சியா  2. ஜாவா3. பர்மா  4. தாய்லாந்து

(07. பின்வருவனவற்றுள் மானிய முறையின் அம்சம் அல்லாதது
   1. ஆட்சி ஒருமுகப்படல்  2. சகல அதிகாரம் கொண்ட அரசாட்சி
   3. சுயபூர்த்தி பொருளாதாரம்
   4. நைட்டுக்கள்,பிரபுக்களின் செல்வாக்கு மேலோங்குதல்

08. ஐரோப்பாவின் மறு மலர்ச்சியின் தொட்டில்
   1. பிரான்ஸ்  2. இத்தாலி  3. இங்கிலாந்து  4. ஸ்பானியா

09. ஆரியர் இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைத்துக் கொண்ட குடியேற்றம்
   1. தீகசம, உபதிஸ்ஸகம  2. மஹாகம, தீகசம  3. உபதிஸ்ஸகம, அனுராதகம
   4. தீகசம, விஜிதபுர

10. இயற்கை சிறுகுன்றை மூடுமாறு அமைக்கப்பட்ட பௌத்த விகாரை
   1. பாமியன்  2. சுவெதகொன்  3. போரபுது  4. அங்கோருவார்

11. கீழ் குறிப்பிடும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னன்
   சோழரிடம் இருந்து நாட்டை விடுவித்தல்
   முதன் முதலில் மகாதீத்த துறைமுகத்தில் காவலரண் அமைத்தல்
   பாண்டிய நாட்டுடன் திருமண உறவை ஏற்படுத்தல்
   1. 1ம் பராக்கிரமபாகு  2. நிஸ்ஸங்கமல்லன்  3. மகாசேனன்
   4. 1ம் விஜயபாகு

12. இறந்த விலங்குகளை புதைக்கும் இடமாக எனது வயிற்றை வைத்திருக்க விரும்பவில்லை என கூறி மாமிசத்தை ஒதுக்கிய மன்னன்
   1. அசோகன்  2. எல்லாளன்  3. அக்பர்
   4. கனிஷ்கன்

**ஆசிரியர் : அகிலன்**



கடந்த வருடம் HISTORY ACADEMY யில் கல்வி கற்ற 77 மாணவர்களில் 58 மாணவர்கள் A பெறுபேற்றையும், 16 மாணவர்கள் B பெறுபேற்றையும், 03 மாணவர்கள் C பெறுபேற்றையும் பெற்றுத்தந்து எனது கல்வி நிலையத்துக்கு பெருமை சேர்த்தமைக்கு இம் மாணவச் செல்வங்களுக்கு எனது நன்றிகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண சபை.....

இவ்விடயம் தொடர்பில் அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நீங்கள் முதலமைச்சராக கடமையேற்றபின் சிறுபான்மை சமூகத்துக்குரிய மாகாணசபையின் அதிகாரங்களை பாதுகாப்பதற்கும், மத்தியில் உள்ள அதிகாரங்களை பெறுவதற்கும் எம்மிடம் உள்ளஅதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் முழு மூச்சாக செயல்படுவீர்கள் என எதிர்பார்த்தோம்.

ஆனால் நடப்பது எதிர்மாறாக உள்ளது. நீங்கள் அதிகாரங்களை தரமறுக்கும் ஆளும்தரப்பு அரசை சேர்ந்தவர். இதேவேளை அதிகாரங்களை கேட்கும் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர் என்பதையும் மறந்துவிடக்கூடாது என்றவகையில் அதிகாரப்பகிர்வு தொடர்பானவிடயங்களில் உங்கள் கவனத்தை ஈர்க்கவேண்டும் என சிறுபான்மைசமூகங்கள் விரும்புகின்றன. என்றும் தெரிவித்துள்ளார்.

## மூதூர் கல்விப் பணிப்பாளரை...

மோசமாகப் பாதிக்கப்பட்ட வலயமாக, மூதூர்க் கல்வி வலயம் விளங்குகின்றது. யுத்த சூழலிலிருந்து நாடு விடுபட்டிருந்தாலும், இன்றும் மூதூர்க் கல்வி வலயம் விடுபடவில்லை. குறிப்பாகத் தமிழ்ப் பாடசாலைகளையே எடுத்துக்கொள்ளலாம். அங்கு இன்னும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவே உள்ளனர். நிபந்தனைகளின் அடிப்படையில் ஐந்து வருடங்கள் குறித்த பாடசாலையில் கடைமையாற்ற வேண்டுமென, புதிய நியமனம் பெறுகின்ற ஆசிரியர்கள் கூட ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களில், செல்வாக்ககளின் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுச்செல்கின்றனர். நியமனங்களைப் பெறுவதற்காக மட்டும் மூதூர் வலயத்தைப் பயன்படுத்துகின்றார்களே ஒழிய, சேவையாற்றுவதற்கல்ல. இதன் வெளிப்பாடாகவே சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய வலயங்களில், 460ற்கும் அதிகமான ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். இவ்விடையம் சம்பந்தமாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணக்கிளை, மாகாணக் கல்வி அமைச்சிற்கும், மாகாணக்கல்வித் திணைக்களத்திற்கும், பல தடைவைகள் எடுத்துக் கூறியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது வேதனைக்குரியதே.

15.05.2014 அன்று தினக்குரலில் வெளியான, இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் செயலாளரின் கருத்து, தவறானதாகும். அவர் குறிப்பிடுகையில், மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, அதனடிப்படையில் மூதூர் வலயம் ஒரு முஸ்லீம் வலயம் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் மாணவர்களின் எண்ணிக்கையைக் கொணடு பாடசாலைகளை வகைப்படுத்தலாம். வலயக்கல்விப் பணிப்பாளரைத் தீர்மானிக்க முடியாது. பாடசாலைகளின் எண்ணிக்கையைக் கொண்டே அந்த வலயத்திற்கான வலயக்கல்விப் பணிப்பாளர் தீர்மானிக்கப்படுவார் என்பது கல்வியமைச்சின் சுற்றுநிருபமாகும்.

மேலும் மூதூர் வலயத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பவர் ஏற்கனவே சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்தவர். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் ஒழுங்கான விசாரணையை மேற்கொள்ளும் பொருட்டே கிழக்குமாகாணக் கல்வியமைச்சின் செயலாளரினால், கல்வியமைச்சிற்குத் தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டது. ஆனால் விசாரணை முன்னெடுக்கப்படாத நிலையில், மூதூர் வலயத்திற்கு, வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது, சட்டவிரோதமானதும், தேவையற்ற செயலுமாகும். அவரின் விசாரணைகள் முடிவடைந்து, குற்றமற்றவராகக் காணப்பட்டால், சம்மாந்துறை வலயத்திற்கே அவர் நியமிக்கப்படல் வேண்டும். அல்லது வெற்றிடமாக உள்ள வலயத்திற்கே நியமிப்பது முறையான செயற்பாடாகும். எது எவ்வாறிருப்பினும், மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனம், மீளப்பெறப்பட வேண்டியது காலத்தின் தேவை என அச் செய்தி தெரிவிக்கின்றது (முழுக்குறிப்பையும் வாசிப்பதற்கு tbn.asia தளத்திற்கு வாருங்கள்)

## பௌத்த துறவி.......

பௌத்த பெண் துறவிக்கே......

இவ்வனர்த்தம் இடம் பெற்றுள்ளது. இவ்வனர்த்தம் தொடர்பாக தெரிய வருவதாவது,

தற்போது பௌத்த துறவி அவசர சிகிச்சை பிரிவில் இருந்து நான்காம் தளத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் – அவருடைய தகவல்களை வெளிப்படுத்த வேண்டாம் எனவும் அத்தளத்துக்கு பொறுப்பான வைத்தியரால் கூறப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. ஆனாலும் துறவியின் தந்தையை தேடும் நடவடிக்கையில் இரகசிய பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

## தமிழியல் விருதுகளுக்கு..

சிறந்த அறிஞர்களைக் கொண்ட நடுவர்குழு விருதுக்குரிய நூல்களையும், விருதாளிகளையும் தேர்வு செய்யும், பணமும் விருதும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் நிபந்தனைகளுக்கமைவாக வழங்கப்படும். இவைகள் அனைத்தினையும்

டாக்டர் ஓ.கே.குணநாதன், மேலாளர்,
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்,
ஓகே.பாக்கியநாதன் அறிஞர்சேலை,
1ஏ, பயணியர் வீதி (50, லேடி மென்னிங் ட்ரைவ்),
மட்டக்களப்பு, இலங்கை.

என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளர் டாக்டர் ஓ.கே.குணநாதன், தெரிவித்துள்ளார்.

## அரோகரா...

திடீரென குறுங்செய்தியொன்று அனுப்பி வைக்கப் பட்டிருந்தது. அக்குறுஞ்செய்தியில் அரோகரா என்ற வார்த்தை மட்டும் காணப்பட்டுள்ளது.

இக்குறுஞ்செய்தியை அனுப்பியது மதகுரு ஒருவர் எனத் தெரியவந்ததை அடுத்தே மக்கள் மனக்கிலேசத்திற்கு ஆளாகியுள்ளனர். மத நல்லிணக்கத்திற்கு எதிரான இச்செயற்பாடு தொடர்பாக மேல் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டனவா என்பது பற்றித் தற்போதுவரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

## ஐ.நா.தீர்மானம்...

இந்த முக்கிய கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம். ஏ.சுமந்திரன் ஆகியோர் ஐ.நா. மனித உரிமைப் பேரவை தீர்மானங்கள் தொடர்பில் விசேட உரையாற்றவுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சர்வதேசக் கடமைகள் என்ன? இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் இத்தீர்மானங்கள் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கி பூரணமான நிறைவேற்றப்பட முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் இக்கூட்டங்களில் ஆராயப்படவுள்ளதுடன் பொதுமக்களின் கருத்துகளும் உள்வாங்கப்படவுள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

## இலங்கைத் தமிழரை...

கிருபநாதன், மகாதேவன் கிருபாகரன் மற்றும் குஸாந்தன் சந்திரலிங்கம் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். அரசியல் அடைக்கலம் கோரிய இவர்கள் மூவரும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால் அவர் பாரிய சித்திரவதைக்கு உள்ளாக நேரிடும் என்று தேவராஜன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

எனவே குறித்த இலங்கையர்களின விசாரணை குடிவரவு சட்டத்தின் அடிப்படையில் நடைபெறவேண்டும் என்று தேவராஜன் வலியுறுத்தியுள்ளார். இவர்கள் மூவரையும் நாடு கடத்தக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் கோரியுள்ளதாக தேவராஜன் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடி பாதிப்பு...

மீன்வாடியை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். தமது வாடி அப்புதிய உல்லாச விடுதிக்கு வரும் உல்லாசப் பயணிகளை தொந்தரவு செய்வதாகத் தெரிவித்தே வாடியை அகற்றுமாறு அச்சுறுத்தியுள்ளனர்.

வலுக்கூடிய இயந்திரப் படகுகளை உல்லாசப்பயண விடுதிகள் பாவிப்பதால் கடலில் மீன்கள் துரத்தப்படுவதால் கடலில் சுமார் மூன்று தொடக்கம் 4 மைல்களுக்குள் மீன்கள் பிடிபடுவது குறைந்துவிட்டது என்பதையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வலுக்கூடிய எந்திரங்களின் சத்தம் மீன்களை கலைத்து விடுவதால் மீன்பிடி கடினமாகியுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த விடுதியின் முகாமையாளர் அந்த வாடி அகற்றப்படவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கின்றார். அதற்குச் சில அரச அதிகாரிகளும் துணை போவதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## தமிழ்க்கிராமங்கள்..

பறக்கவிட்டு இவ்வருடமும் அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்க் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வரடத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க்கிராமமேனும் உள்ளடக்கப்படவில்லை என அவர் குற்றஞ்சாட்டியள்ளதுடன் கடந்த காலங்கள் எவற்றிலும் அம்பாறையின் தமிழ்க் கிராமங்கள் அபிவிருத்திக்காகக் கணக்கெடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்தார். அத்துடன் இன விகிதாசாரப்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று தமிழக்கிராமங்களும் ஒரு முஸ்லிம் கிராமமுமே தேர்வாகியிருக்க வேண்டும். ஆனால் அம் மாவட்டைத் பொறுத்தவரை தலா இரண்டு தமிழக்கிராமங்களும் இரண்டு முஸ்லிம் கிராமங்களும் தெரிவாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

## சிங்களப் பொங்கலுக்கும்...

நிறுத்துமாறு கோரியிருந்தனர். அதனையடுத்து தமது வேண்டுதலை அக்குடும்பத்தினர் இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தினர். அத்துடன் தமது பொங்கல் இன்னும் சிறிது நேரத்தில் நிறைவடைந்து விடும் என்பதையும் மிகவும் பண்புடன் இராணுவத்தினருக்குத் தெரிவித்திருந்தனர்.

எனினும் தமது கட்டளைக்குப் பணியுமாறு அறிவுறுத்தியதுடன் பொங்கல் அடுப்பையும் அருகிலிருந்த தண்ணீரை ஊற்றி அணைத்துள்ளனர்.

இதனையடுத்து ஒருபானைப் பொங்கலைப் படைத்து விட்டு ஏனைய இரு அரையவியல் பாணைகளையும் எடுத்துக்கொண்டு கோயிலை விட்டு வெளியேறியுள்ளனர்.

## விதவைகளுக்கு உதவி...

முயற்சியால் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒன்பது குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கும் முயற்சிகளுக்காக குடும்பமொன்றுக்கு முப்பததையாயிரம் ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளன. பாரதிவிதவைகள் சங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவ் ஒன்பது பெண்களுக்கும் கிடைக்கத்தயாரான இவ்வுதவியை குறிந்த பிரதேசத்திற்குப் பொறுப்பான கிராமசேவையாளர் தடுக்க முற்பட்ட போதும் பிரதேசச் செயலாளரின் தலையீட்டால் சுமகமாக இந்நடவடிக்கை முன்னெடுக்கப்ட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வுதவிகள் தமக்குக் கிடைக்க பாடுபட்ட பிரதேசச் செயலாளர் தி.பிரதீபன் மற்றும் டெனிஸ் அகதிகள் பேரவைத் தலைவர் நிரோசன் ஆகியோருக்குத் தமது நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்வதாக பாரதி விதவைகள் சங்கத்தின் தலைவர் திருமதி.அ சந்திரமலர் மற்றும் செயலாளர் சி.ஜீவராணி ஆகியோர் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

## 3069 ஏக்கர்காணி....

பிரதேசங்கள், குளங்கள், கால்வாய்கள், அடர்காடுகள், சிறுகாடுகள், தொல்பொருட்துறை நிலங்கள், திறந்த வெளி நிலங்கள், பண்ணைகள் ஆகிய வளங்கொழிக்கும் நிலப்பகுதியைக் கையகப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்டுள்ள நில அளவைத் திட்ட வரைபடமே இதற்குச் சான்றாகக் கிடைத்துள்ளது.

பூஜா பூமித் திட்டம் என்பது பௌத்த ஆலயங்களுக்கு அரச காணிகளை இலவசமாக வழங்கும் திட்டமாகும். இலங்கை காணி நடைமுறைச் சட்டக்கோவையில் இதற்கான ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் ஏனைய மதங்களான சைவ மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கு அரச காணியகள் வழங்கப்படும் போது அவை நீண்டகாலக் குத்தகைக்கே வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது என அவாட தெரிவித்தார்.

பன்னெடுங்காலமாகத் தமிழர்கள் வசித்த பிரதேசங்களில் காணிகளுக்கு உறுதி வழங்கப்படாமலிருப்பது யாவருமே அறிந்த உண்மை அதன் அடிப்படையில் அவ்வாறான காணிகளை அரச காணிகளாக உரிமை கோரி அதனை இத்திட்டத்தின் ஊடாகப் பௌத்த ஆலயங்களுக்கு வழங்கிவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவே கருத வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார்.

(நிலஅளவைப் படத்தினை tbn.asia தளத்தில் முழுமையாகப் பார்க்கலாம்)

## வட்டுக்கோட்டை...

விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இன்றைய இளைஞர் சமுதாயம் அறிவுப் புரட்சியின் பால் உந்தப்பட்டவர்கள். அவர்கள் நிச்சயம் தவறான பாதைக்கு செல்ல மாட்டார்கள்.ஆனால் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் நான் குறிப்பிடுவது 1976ம் ஆண்டு அதாவது வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின்போது கிழக்கு மாகாணத்திலிருந்து பெரும்பாலான இளைஞர்கள் இங்கிருந்து மூளைச் சலவை செய்யப்பட்டு ஒரு சில கபடதாரிகளால் உணர்ச்சிவசப்படுத்தப்பட்டு அங்கே அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

அப்போது அங்கு எடுக்கப்பட்ட தீர்மானமானது வெறுமனே அழிவுக்கான கோசங்களாகவே இருந்ததே தவிர, எந்தவிதமான ஓர் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் அது வித்திடவில்லை. இதன்வாயிலாக கோசங்களும் கோசங்களை முன்வைத்த அந்த வட மேலாதிக்கவாதிகளும் வெற்றி பெற்றார்களே தவிர, ஓட்டு மொத்த எமது தமிழ் சமூகம் அழிவுப்பாதைக்கே சென்றது.

## வளையல் திருடியவர்..

அவ்யுவதியை திருகோணமலை ஆலங்கேணியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

வளையல் திருடியதையும் அதனைக் காத்தான்குடியில் தனியார் நிதநிறுவனத்தில் அடைவு வைத்துப் பணம் பெற்றதையும் குறித்த யுவதி ஒப்புக்கொண்டார். இக்கொள்ளை தொடர்பான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் மாதம் 16ம் திகதிவரை ஒத்திவைத்த நீதவான் குற்றவாளியைப் பிணையிற் செல்ல அனுமதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குர் ஆன் தெரிவிப்பதாவது




குர்ஆனை உரிய முறையில் ஓதி அதன் படி செயல்பட்டவர் நாளை மறுமையில் சங்கையான உயர்ந்த மலக்குகளுடன் இருப்பார். கஷ்டப்பட்டு திக்கித் திக்கி ஓதுபவருக்கு இரண்டு மடங்கு கூலி கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் குர்ஆனை ஓதுங்கள். நிச்சயமாக அது நாளை மறுமையில் அதை ஓதியவருக்கு "பரிந்துரை" செய்யும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தவரையும், குர்ஆனையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும், குர்ஆனின் இரண்டு சூராக்கள் அல்பகரா, ஆலு இம்ரான் முன்வந்து இரண்டையும் ஓதியவருக்காக அல்லாஹ்விடத்தில் வாதாடும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்). அல்லாஹ்வுடைய வேதத்திலிருந்து யார் ஒரு எழுத்தை ஓதுகின்றாரோ, அவருக்கு ஒரு நன்மை கிடைக்கும். ஒரு நன்மை செய்தால், அது பத்து மடங்காக்கப்படும். அலி·.ப், லாம், மீம் என்பது ஒரு எழுத்து என்று நான் கூற மாட்டேன். ஒரு எழுத்தாகும். லாம் என்பது ஒரு எழுத்தாகும், மீம் என்பது ஒரு எழுத்தாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி) "எவருடைய உள்ளத்தில், குர்ஆனில் கொஞ்சம் கூட மனனம் இல்லையோ, அவருடைய உள்ளம் பாழடைந்த வீட்டைப்போல்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

# செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாறு

பாகம் : 04



அங்கெல்லாம் தரும நிறுவனங்களின் தயவிலும், நண்பர்களின் தயவிலும் வாழ்ந்து வந்தார்.

1876ம் ஆண்டு – சர்வதேச செஞ்சிலுவைக் குழு எனப் பெயர் மாற்றப்பட்டது.
1876 – 1878 – ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் இடையேயான யுத்தத்தின் போது முதன் முறையாக செம்பிறைச் சின்னம் உபயோகிக்கப்பட்டது.

இறுதியாக 1887ல் சுவிஸ் நாட்டுக்குத் திரும்பிய அவர் கொன்ஸ்ரன்ஸ் ஆற்றுக்கு அருகே அமைந்திருந்த கீடன் கிராமத்தில் சுகவீனமுற்று இருந்தார். உள்ளூர் வைத்திய சாலையைத் தஞ்சமடைந்திருந்த அவரை ஜோர்ஜ் போம்பெக்கர் என்ற ஊடகவியலாளர் அடையாளம் கண்டு கொண்டார். ஹேன்றி டுனான்ட் பற்றி அவர் எழுதிய அனைத்தும் எழுதிச் சிலநாட்களுக்குள், ஐரோப்பா முழுவதும் சகல பத்திரிகைகளிலும் மீள்பிரசுரமாகியது.

உலகம் முழுவதிலுமிருந்து அனுதாபச் செய்திகள் அவருக்கு வரத் தொடங்கின. ஒரே நாளில் அவர் இழந்த மதிப்பும், மரியாதையும், பிரபல்யமும் அவருக்குக் கிடைக்கத் தொடங்கின.

1901 – உலகின் முதலாவது நோபல் சமாதானப் பரிசு ஹென்றி டுனான்ட் அவர்களுக்கு வழங்கப்பட்டது
1910ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் திகதி ஜீன் ஹென்றி டுனான்ட் அவர்களை மரணம் தழுவிக் கொண்டது.
அவரது பிறந்த தினமான மே மாதம் 08ம் திகதி சர்வதேச செஞ்சிலுவைத் தினமாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

சர்வதேச ரீதியில் செஞ்சிலுவைச் சின்னம் பாதுகாப்புக்குரிய ஒரு சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. போர்க் களங்களில் இச் சின்னம் அணிந்து கொண்டுள்ள மருத்துவக் குழுவிற்குப் பாதுகாப்பளித்தல் வேண்டும். இச் சின்னம் அணிந்துள்ளவர்களைத் தாக்கக்கூடாது.

தொடரும் ....


டாக்டர் என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
திருகோணமலை கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்



# பாசிப்பருப்பு கீரை புட்டு

**தேவையான பொருட்கள்**

பாசிப்பருப்பு - 400 கிராம், முருங்கைக்கீரை - 1 கப், சிறிதாக நறுக்கிய வல்லாரை கீரை - 1 கப், பெரிய வெங்காயத் துருவல் - 1 கப், இஞ்சி விழுது – சிறிது, பச்சை மிளகாய் - 1-4 கப், கொத்தமல்லிததழை – 1-4 கப், கேரட் துருவல் - 1-2 கப், கடுகு – 1-2 தே.கரண்டி, ரீ·.பைண்ட் ஆயில் - 1 மே.கரண்டி, உப்பு - தேவைக் கேற்ப



**செய்முறை**

பாசிப்பருப்பை ஊறவைத்து சற்று உலர்ந்தவுடன் மிக்ஸியில் மூன்று நிமிடம் கொடுத்து தூளாக்கி தனியே வைத்துக் கொள்ளவும். முருங்கைக் கீரை, வல்லாரைக் கீரை ஆகியவற்றை சிறிது உப்பு சேர்த்து தனித்தனியே வேக வைத்துக்கொள்ளவும். தாச்சியில் எண்ணெய் விட்டு கடுகு நன்கு பொரிந்ததும், இஞ்சியைச் சேர்த்து வதக்கவும். பின் வெங்காயத்தையும் சேர்த்துப் பொன்னிறமாக வறுபட்டதும் பச்சை மிளகாய், கொத்தமல்லித் தழை ஆகியவற்றைப் போட்டுக் கிளறி இறக்கிற விட வேண்டும். இக்கலவை, வேகவைத்துள்ள முருங்கைக்கீரை, வல்லாரைக் கீரை ஆகியவற்றை பாசிப்பருப்புத் தூளுடன் சேர்த்து நன்கு கலந்துகொள்ள வேண்டும். ருசிக்கேற்ப உப்பு சேர்த்துக் கொள்ளலாம். இப்போது மிக்ஸ்டு புட்டு மாவு ரெடி. இதை புட்டுக்குழலில் மேலும் கீழும் கேரட் துருவலைத் தூவி மூடி வேக வைத்து பரிமாறலாம்.

# தே.பாலின் தேவை

தேங்காய், நம் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்ட எல்லா இடத்திலும் தேங்காய்க்கு முதல் மரியாதை தான். தேங்காய், மங்களகரத்தின் அடையாளச் சின்னம் மட்டுமல்ல, சிறந்த மருத்துவப் பொருளும்கூட என்கிறது சித்த மருத்துவம்.

தேங்காயில் உள்ள "பேட்டி ஆசிட்" (Fatty acid) உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைக்கிறது. உடல் எடையைக் குறைக்கிறது என்று சமீபத்திய ஒரு ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாய்ப்பாலில் உள்ள புரதச் சத்துக்கு இணையானது இளநீரில் உள்ள புரதச்சத்து. சித்த மருத்துவம் உள்பட இந்திய மருத்துவ முறைகளில் தென்னையின் பயன்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. தென்னையின் வேரிலிருந்து குருத்து வரை எல்லாப் பாகங்களிலும் மருத்துவக் குணங்கள் கொட்டிக் கிடப்பதாகச் சொல்கிறது சித்த மருத்துவம்.



தேங்காய், தேங்காய் எண்ணெய் உடல்நலத்துக்குக் கேடு என்ற பிரசாரம், தேங்காய் எண்ணெய் மீது சுமத்தப்பட்டிருக்கும் அவதூறு என்கிறார்கள் நமது பாரம்பரிய மருத்துவர்கள். புரதச்சத்து, மாச் சத்து, கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு உள்ளிட்ட தாதுப் பொருள்கள், வைட்டமின் "சி", அனைத்து வகை பி காம்ப்ளக்ஸ் சத்துக்கள், நார்ச்சத்து என உடல் இயக்கத்துக்குத் தேவைப்படும் அனைத்துச் சத்துகளும் தேங்காயில் உள்ளன.

தொடரும் .. ..

# அழகைப் பேண சில இலகு டிப்ஸ்



- முகத்தில் பருக்கள் இருந்தால் வெள்ளைப் பூண்டையும், துத்தி இலையையும் நறுக்கி, நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி தினசரி பருக்கள் உள்ள இடத்தில் தடவி வந்தால், விரைவில் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அதேபோல், உடம்பில் தழும்புகள் இருந்தால் அவரை இலை சாறு பூசலாம். தழும்புகள் மறைந்துவிடும்.
- இளம் கொத்துமல்லி இலைகளை எடுத்து சாறு பிழிந்து, அதில் கொஞ்சம் கஸ்தூரி மஞ்சள்தூளைக் கலந்து தோல் மீது தடவி வர தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.
- முகத்தில் காது, கால், கைகளில் நிறைய முடிகள் இருப்பவர்கள், வேப்பங்கொழுந்து, குப்பை மேனி இலை, விரலி மஞ்சள் அரைத்துப் பூசி உலரவிட்டு பின் கழுவினால் முடி உரிர்ந்து விடும்.
- தூக்கமின்மையால் கண் எரிச்சல் ஏற்படும். அவ்வாறு அடிக்கடி ஏற்பட்டால் நந்தியாவட்டை பூவால் கண்களுக்கு ஒத்தடம் கொடுத்தால் உடனே சரியாகிவிடும்.
- முடி மிருதுவாக இருக்க சீத்தாப்பழ விதைகளைப் காயவைத்து பொடியாக்கி சீயக்காயுடன் சேர்த்து அரைத்துத் தேய்த்து குளிக்கலாம்.
- இரவில் தலையணைக்கு அடியில் செம்பருத்திப் பூ இலைகளை வைத்துப் படுத்து வந்தால் பேன்கள் ஒழியும்.
- செம்பருத்திப் பூக்களையும் கற்பூரப் பொடி இரண்டையும் தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து தலைக்குத் தடவிக் கொண்டால் பேன்கள் ஓடிவிடும்.




# குருப் பெயர்ச்சி (13.06.2014 – 05.07.2015)

***குரு பகவான் வரும் ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 மாலை 06.03 மணிக்கு மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு மாறுதலாக உள்ளார். 05.07.2015 வரை கடக ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். குரு பகவான் கடக ராசியில் சஞ்சரிக்கவுள்ளதால் 12 ராசிகளுக்கும் உண்டாக்கக் கூடிய பலா பலன்கள். இவை பொதுவான பலன்களே!***




## துலாம்


அனைவரையும் கவர்ந்திழுக்கக் கூடிய அழகும், கட்டான உடலும் கொண்ட அன்பர்களே, இம்முறை குருப்பெயர்ச்சியானது அவ்வளவு சாதகமாக அமையாது. எனவே தொழில் செய்பவர்கள் பெரிய முதலீடுகளில் ஈடுபடுதல் அவ்வளவு சிறந்தது அல்ல.
உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் அதற்கேற்ப கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் தடையின்றி நிகழும். உறவினர்கள் ஓரளவு அனுகூலமான முறையில் செயல்படுவர். எந்தவொரு காரியத்திலும் அதிக உழைப்பினை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இடையிடையில் உடல் ஆரோக்கியம் சிறிது குறையலாம். தேவைக்கேற்றபடி பணவரவுகள் காணப்பட்டாலும் எதிர்பாராத வீண் செலவுகள் ஏற்படும்.
கல்வியில் ஓரளவு முன்னேற்றகரமான நிலையிருக்கும். 6 - 8 ஆம் மாதங்கள் அற்புதமான காலமாக காணப்படும். ஓரளவுக்கு எதிலும் முன்னேற்ற நிலை கிட்டும்.
12ம் மாதத்திற்குப் பின்னர் ஓரளவுக்கு சுமூகமான நிலை காணப்படும். தடைப்பட்ட சுப காரியங்களும் நடைபெறும். வெள்ளை, பச்சை ஆகியன அதிர்ஷ்ட நிறங்களாகும்.




## விருச்சிகம்

நல்ல அறிவாற்றலும் மற்றையவர்களின் மனநிலை அறிந்து பேசும் திறனும் கொண்ட அன்பர்களே, இம்மாற்றமானது மிகவும் அற்புதமான அமைப்பாகும். பொருளாதார நிலை சிறப்பானதாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை எடுத்தல் சிறந்தது. உறவினர்களின் ஆதரவு பெருகும். கொடுத்த கடன்கள் யாவும் தடையின்றி கிடைக்கும். உத்தியோகத்தில் நிம்மதியுடன் செயல்பட முடியும். புதிய வேலைவாய்ப்புகள் தகுதிக்கேற்றபடி கிடைக்கும்.
மேடைப் பேச்சுக்களில் நிதானமுடன் நடந்து கொள்வது நல்லது. பயிர் விளைச்சல் எதிர்பார்த்தபடி அதிக விளைச்சலைத் தரும். குடும்பத்தில் சுப காரியங்கள் கூடி வரும். லாட்டரி, ரேஸ் போன்றவற்றால் லாபம் காணமுடியும், இருந்தாலும் சிந்தித்து செயல்படுவது நல்லது.
கல்வியில் சிறு சிறு தடைகளுக்குப் பின்னர் முன்னேற்றம் ஏற்படும். பண வரவிற்கு பஞ்சம் இருக்காது என்பதால் கொடுக்கல் வாங்கல்கள் நன்மையளிக்கும். 12 ஆம் மாதத்திற்குப் பின்னர் சற்று நிதானத்துடன் இருத்தல் அவசியம். அதிர்ஷ்ட நிறங்கள் ஆழ்சிவப்பு மற்றும் மஞ்சள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாதனை படைத்தது ஸ்பென்ஸ் துடுப்பாட்ட அணி

18.05.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைப்பெற்ற ஸ்பென்ஸ் மற்றும் ஹமீடியா அணிகளுக்கு இடையிலான இலங்கைத் துடுப்பாட்டச் சபையின் 50 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் ஸ்பென்ஸ் கழகம் 248 ஓட்டங்களால் அபார வெற்றி அடைந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி அடைந்த ஸ்பென்ஸ் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

துடுப்பாட்டத்திற்காகக் களமிறங்கிய ஸ்பென்ஸ் கழகம் தனது 50 பந்துப்பரிமாறங்களினதும் முடிவில் 7 இலக்குகளை இழந்து 281 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

282 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்து ஆட களமிறங்கிய ஹமீடியா கழகம் 17.2 பந்துப் பரிமாற்றங்களில் 33 ஓட்டங்களுக்குத் தனது சகல இலக்குகளையும் இழந்து தோல்வியை தழுவிக்கொண்டது.

அது மாத்திரம் இன்றி திருகோணமலை துடுப்பாட்ட வரலாற்றில் ஒரு அணியை குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க செய்த சாதனை ஸ்பென்ஸ் கழகம் இவ் வெற்றியின் ஊடாகத் · தனதாக்கிக் கொண்டது.

## வாழைச்சேனை இந்துக் கல்லூரி முதலிடம்

கரப்பந்தாட்டக் குழு விளையாட்டில் மாகாண மட்டப் போட்டியில் வாழைச்சேனை இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

# விளையாட்டு முரசு

## உலகக் கோப்பை கப்டன் திருகோணமலையில்

இலங்கை அணியின் முன்நாள் தலைவர் அர்ஜுனா ரணதுங்க திருகோணமலையில் இளவல்களுக்கான பயிற்சிப் பாசறையொன்றில் கலந்துகொண்டுள்ளார். கடந்த 22ம் திகதி ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இவ்வனுபவப் பகிர்வு முகாம் நடைபெற்றுள்ளது.

13. 15 வயது மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட இம்முகாமிற்கு நேசன் டிரஸ்ட் வங்கி முழு அனுசரணையை வழங்கி இருந்ததுடன் திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் இதற்குப் பூரண ஒத்துழைப்பையும் வழங்கி இருந்தது. (படங்கள் கதிரவன்)





## கிழக்கு மாகாண விளையாட்டுக்கள் 5ல் மட்டக்களப்பு முதலிடம்

சம்மாந்துறையில் நடைபெற்ற கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் ஐந்து விளையாட்டுப் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்டம் வெற்றியடைந்துள்ளது.

பெண்களுக்கான வலைப்பந்து, ஆண் மற்றும் பெண்களுக்கான மேசைப்பந்து, ஆண் மற்றும் பெண்களுக்கான பீப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் மட்டக்களப்பு முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

இவ் வெற்றிகளுக்கு மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களான வீ.ஈஸ்வரன், யோகானந்தராஜா, சங்கீதா ஆகியோரும் பயிற்றுவிப்பாளர் சந்துரு ஆகியோரும் காரணம் என வீர வீராங்கனைகள் தெரிவித்துள்ளனர்.



## திருமலை விபுலானந்தா மீண்டும் முதலிடம்

திருகோணமலை வலய மட்ட துடுப்பாட்டப் போட்டிகளில் பத்தொன்பது வயதிற்குட்பட்ட பெண்களுக்கான போட்டிகளில் மீண்டும் முதலிடத்தைப் பெற்று விபுலானந்தா தனது இரண்டாவது தொடர் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயத்துடன் இறுதிப் போட்டியில் விளையாடிய விபுலானந்தா அணி தனது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இவ்வெற்றியினால் மாகாண மட்டப் போட்டிகளுக்குச் செல்லும் வாய்ப்பை அவ்வணி பெற்றுள்ளது.

கடந்த வருடமும் சாம்பல்தீவு மகாவித்தியாலய அணியை வென்று மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய இப் பாடசாலையின் பத்தொன்பது வயதிற்குட்பட்ட பெண்கள் அணி மாகாண மட்டத்தில் கடும் சவாலை எதிர்கொண்டு 4ம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை மாகாண மட்டத்தில் முன்னர் பெற்றுக்கொண்ட பெறுபேற்றை விட முன்னேற்றம் காணுவோம் என அப்பாடசாலையின் அதிபர் திரு. ஆர்.எஸ் ஜெரோம் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வருடம் 19வயதிற்குட்பட்ட கரப்பந்தாட்ட ஆண்கள் போட்டியிலும் கராத்தே மற்றும் பூப்பந்தாட்டப் போட்டிகளிலும் வலய மட்டப் போட்டிகளில் தமது பாடசாலை வெற்றிகளைப் பதிந்துள்ளதாகவும் அவ்வெற்றிகளுக்காக உழைத்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேசச் செய்திகள்

## "மலேசிய விமானம்" சுட்டு வீழ்த்தப்பட்டது

இராணுவ பயிற்சியின் போது மாயமான மலேசிய விமானமான ஆர்370 சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக புத்தகமொன்றில் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

தாய்லாந்து - அமெரிக்கா இராணுவ கூட்டுப்பயிற்சியின் போது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்றும் பின்னர் இந்த தகவல் மூடிமறைக்கப்பட்டுள்ளது எனவும். மாயமான விமானம் குறித்து எழுதப்பட்ட புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாயமான மலேசிய விமானத்தில் பயணம் செய்த உறவினர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது குறித்து இந்த புத்தகம் வெளியாகியுள்ளது.

"விமானம் ஆர்370 மர்மம்" (Flight MH370 The Mystery) என்ற புத்தகம் அவுஸ்திரேலியாவில் விற்பனைக்கு வந்துள்ளது. லண்டனை சேர்ந்த எழுத்தாளர் நைஜல் கோவ்தோன் (Nigel Cawthorne) இந்த புத்தகத்தை எழுதியுள்ளார்.

மாயமான மலேசிய விமானத்தில் பயணம் செய்தவர்களுக்கு என்ன நடந்தது என்று அவர்களின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்று கிட்டத்தட்ட நிச்சயமாக எதுவும் தெரிந்திருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்தை சேர்ந்த மைக் மெக்கே (Mike McKay) நேரடியாக நடந்த சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிட்டு இந்த புத்தகத்தில் நைஜல் புதிய தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மாயமான மலேசிய விமானம் கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்ததை அடுத்து சுட்டு வீழ்த்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானம் மாயமானபோது தெற்கு சீன கடலில் தாய்லாந்து, அமெரிக்கா, சீனா, ஜப்பான், இந்தோனேஸியா இணைந்து போர் பயற்சி நடத்தினர். இந்நிலையில் விமானம் ஒன்று எரிந்து தாய்லாந்து வளைகுடா பகுதியில் விழுந்ததை மைக் மெக்கே பார்த்துள்ளார் என்று இரண்டையும் ஒப்பிட்டு நைஜல் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சியில் துப்பாக்கி சூடு உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்போது எதிர்பாராத விதமாக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சீனாவின் பீஜிங்கிற்கு புறப்பட்டுச்சென்ற மலேசிய எயார்லைன்ஸ் விமானம் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி நடுவானில் மாயமானது. விமானம் குறித்து இதுவரை உறுதியான தகவல்கள் எதுவும் இல்லை.

இந்த விமானம் இந்திய பெருங்கடலின் தென்பகுதியில் விழுந்து நொறுங்கி இருக்கக்கூடும் என்ற வியூகத்தில் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது, எனினும் பலன் இல்லை. அல்கைதா ஆதரவாளர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## நாடுகடத்தப்பட்ட பெண் நட்டஈடு கோரி வழக்கு

புத்தரின் படத்தை வலது கையில் பச்சை குத்தியிருந்த குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்ட பிரித்தானியப் பெண், குறித்த நடவடிக்கைக்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

உநயோமி மிச்செல் கொல்மென் (வயது 37) என்ற பிரித்தானிய தாதியொருவர், தமது வலது கையில் புத்த பகவானின் படத்தைப் பச்சை குத்தியிருந்தார் என்ற குற்றத்துக்காக நாட்டுக்குள் நடமாட அனுமதிக்கப்படாமல், கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டார்.

இவரைக் கைது செய்து காவல்துறை நடந்து கொண்ட விதத்திற்கு எதிராகவே அவர் ஒரு கோடி 'ரூபாய் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தான் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர் என்றும், புத்த பகவான் மீது தமக்குள்ள பக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் தாமரை மலரில் புத்தர் அமர்ந்திருப்பது போன்ற சித்திரத்தைத் தாம் தமது வலது கையின் தோள்பட்டையில் பச்சை குத்தியிருக்கிறார் என்றும், இது போன்று புத்தரின் பக்தர்கள் பலர் தங்களின் தேகத்தில் புத்தரின் சித்திரங்களைப் பொறித்திருக்கின்றமை தமக்கு நன்கு தெரியும் என்றும் அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3069 ஏக்கர் காணி திருமலையில் சுவீகரிப்பா?

பூஜா பீமி என்ற பெயரில் திருகோணமலையில் சுமார் 3069 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி. நந்தகுமார் (நந்தன் மாஸ்டர்) மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அதற்கான நிலஅளவைப் பணிகள் முற்றுப் பெற்றுள்ளதாகத் தெரிவித்த அவர் அந் நில்அளவைப் படவரைபை அதற்குச் சான்றாக கையளித்துள்ளார்.

திரியாய்கட்டு, சாவிஆத்துக்கட்டு, கட்டுக்குள கட்டு, திரியாய் குள கட்டு, நொச்சிமோட்டைக் கட்டு, கறுப்பிட்டிக் கண்டல், புளியடிக்கண்டல், வேடன் குளத்துக் கட்டு ஆகிய பழந்தமிழ் கிராமங்களை உள்ளடக்கிய வயல்நிலங்கள், மலைப்....... 13


Tracing Showing The Land To be Declared as Pooja Bhoomi at Thiriyai
The Divisional Secretary's (Kuchchaveli) Requisition for Survey No:DS/KU/SR/2010/41, dated 2010.03.31
(S.G.'s No.: Tn/KCH/2010/205)
The Work Falls within Part Lot 1 inTopo.P.P.13,
Lots 37 - 54, 250 - 258 and Part of Lot 406 in F.T.P.29 .
Part of Lots 148,392,395 Lots 393 & 395 in B.S.V.P.58
Schedule



## அபிவிருத்தியில் கிழக்கின் தமிழ்க் கிராமங்கள்

### புறக்கணிப்பு - இரா. துரைரத்தினம்

கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்க்கிராமங்கள் தவிர்க்கப்படுவது இவ்வருடமும் தொடர்வதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் தமிழ்க் கிராமங்கள் கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தவிர்க்கப்பட்டதை அடுத்து இவ்விடயத்தை மாகாணசபை முதலமைச்சருடன் கலந்துரையாடிய போது அவ்வாறு இனிவரும் காலங்களில் நடைபெறாது என அவர் உறுதியளித்திருந்ததாகவும் அவ்வுறுதியைக் காற்றில்.... 13

## "வட்டுக்கோட்டைத் தீர்மானம் - ஓர் அழிவின் கோசம்"

### மட்டக்களப்பில் சந்திரகாந்தன்

வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் போது கிழக்கு மாகாணத்திலிருந்து பெரும்பாலான இளைஞர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு, உணர்ச்சி வசப்படுத்தப்பட்டு, வட்டுக் கோட்டைக்கே அனுப்பி வைக்கப்பட்டார்கள் என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கடந்தவாரம் கைட் நோஸன் கம்பஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பரிசளிப்பு... 13

## உல்லாசத்துறையால் மீன்பிடி பாதிப்பு



கிழக்கில் அதிகரித்துவரும் உல்லாசப் பயணத்துறையின் செயற்பாடுகளால் மீன்பிடித்துறை பாதிக்கப்பட்டு வருவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்துவரும் உல்லாசப் பயணத்துறையின் செய்றபாடுகள் கட்டுக்கு மீறிச் செலவ்தாலேயே இந்நிலை தமக்கு எழுந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். ஒழுங்கு முறைப்படுத்தப்படாத உல்லாசபயணத்துறையின் செயற்பாடுகளே தமது மீன்படியைப் பலவீனமாக்குவதாக நிலாவெளியைச் சேர்நத மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் உல்லாசவிடுதியொன்றால் தமது.... 13

## தமிழியல் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


மட்டக்களப்பினை தலைமையகமாகக் கொண்டு இயங்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் 2014 ஆம் ஆண்டுக்கான தமிழியல் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டுதோறும் ஈழத்திலும் இலங்கையிலும், வாழ்கின்ற ஈழத்து தமிழ் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம், தமிழியல் விருது வழங்கி வருகின்றது. அந்த வகையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

முதல்பதிப்பு ஏற்றுக் கொள்ளபடும், நூல்கள் வந்து சேர வேண்டிய கடைசிநாள் எதிர்வரும் 10.06.2014 ஆகும்.

ஒரு படைப்பாளி எத்தனை ஆக்கங்களையும் அனுப்பி வைக்கலாம், நூலுடன், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி கொண்ட விபரத்தினையும் இத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். 13

## மலைமுரசின் அலுவலகத்தில் மகுடம் சஞ்சிகை ஆசிரியர்



மட்டக்களப்பில் இருந்து வெளியாகும் காலாண்டு இதழான மகுடம் சஞ்சிகையின் ஆசிரியர் திரு.வீ மைக்கல் கொலின் அவர்கள் மலைமுரசின் அலுவலகத்திற்கு கடந்த வாரம் வருகை தந்திருந்தார்.

சிறுகதைச் சிறப்பிதழாக மலர்ந்திருக்கும் மகுடம் சஞ்சிகையின் ஆறாவது இதழை அவர் மலைமுரசின் ஆசிரியரிடம் கையளிப்பதைக் காணலாம்.

திருகோணமலையைப் பிறப்பிடமாக்க கொண்ட மைக்கல் கொலின் தாகம் இலக்கிய வட்டத்தின் ஊடாக ஒரு தசாப்த காலமாக திருகோணமலையில் இலக்கிய பணிகளை முன்னெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் மலைமுரசின் வருகைக்கு முழுப்பங்காற்றியவர் அவர் என்பதும் இவ்விடத்தில் நினைவுகூறப்பட வேண்டியதே.

## மட்டக்களப்பில் வளையல் திருடியவர் திருமலையில் கைது

வீட்டிற்கு வந்துச் சென்ற பெண்ணொருவர் அவ் வீட்டுக் குழந்தையின் கை வளையளைத் திருடி அடைவு வைத்துப் பணமாக்கியதால் கைதாகியுள்ளார்.

மட்டக்களப்பு தாமரைக்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டிற்கு வருகை தந்த அவ் வீட்டில் முன்னொருகாலத்தில் வாடகைக்குக் குடியிருந்த பெண்ணே இக்கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த யுவதி வந்துச் சென்ற பின்னர் தமது பெண் குழந்தையின் வளையல்கள் காணாமற் போயிருப்பதைக் கண்ணுற்ற பெற்றோர் வந்து சென்ற யுவதியின் மீது சந்தேகங் கொண்டு அவரைத் தமக்குத் தெரிந்த முகவரிகளில் தேடியுள்ளனர். அவ்வெம் முகவரிகளிலும் குறித்த யுவதி காணப்படாததால் மட்டக்களப்பு காவல்நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிந்துள்ளனர். அதனையடுத்து குறித்த யுவதியின் தடங்களைப் பின்பற்றிச் சென்ற மட்டக்களப்பு காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரவினர் .... 13

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

திருகோணமலை கடல் முக வீதியும் வடகடற்கரைவீதியும் சந்திக்கும் திருப்பத்திலுள்ள இளனிக் கடை உரிமையாளரின் தங்கச் சங்கிலியை கடந்த திங்கட் கிழமை உந்துருளியில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

பொருட்களை வாங்கும் பாவனையில் தமிழில் உரையாடியுள்ள இவர்கள் தருணம் பார்த்து திடீரென கழுத்திலுள்ள தங்கச் சங்கிலியை திடீரென அறுத்துள்ளதாக தெரிகின்றது. காவல்துறையிலிடப்பட்ட புகாரின் பேரில் விசாரகைள் நடைபெறுகின்றன.

அலைபேசி - 075-2954733

## கர்ப்பிணியான பெண் பௌத்த துறவி

திருகோணமலை பொது வைத்தியசாலையில் வயிற்று வலி எனக் கூறி அனுமதிக்கப் பட்ட பௌத்த துறவி கர்ப்பிணி என தெரிய வந்துள்ளது.

கடந்த 09ம் திகதி வைத்தியசாலையில் வயிற்று வலி எனக் கூறி அனுமதிக்கப்பட்ட போது அத்துறவி அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அதனையடுத்து அவரது இரத்தம் மற்றும் சிறுநீர்ப் பரிசோதனைகளின்போது அவருடைய வயிற்றில் குழந்தை இருப்பது தெரியவந்துள்ளது.

கோமரங்கடவெல - பக்மீகம பகுதியைச் சேர்ந்த இருபத்தியிரண்டு வயதுடைய இளம்......... 13

## வாழ்வாதார உதவிகளைக் கோரும் பாரதி முதியோர் கிராமிய சங்கம்

வரோதய நகர் கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெரும்பான்மையான வயோதிபர்கள் அடிப்படை வசதிகளின்றிக் கடும் துன்பங்களை எதிர்கொள்வதாக அக்கிராமத்தின் முதியோர் சங்கத்தினர் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

வன்முறைகளாலும் அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட இக்கிராமத்தில் 1942ம் ஆண்டுக்குப் பின் பிறந்த வயோதிபர்களுக்கு மட்டுமே சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் உதவித் தொகையான ஆயிரம் ரூபாய்கள் வழங்கப்படுகின்றது என பாரதி கிராம முதியோர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

பரோபகாரம் மனங்கொண்டவர்கள் அம் முதியோர்களுக்கான உதவிகளைத் தமது சங்கத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்த குறித்த சங்கத்தின் செயலாளர் திரு.லோரண்ஸ் இவ்வாறு பணமாகவோ அன்றேல் பொருட்களாகவோ கிடைக்கும் உதவிகளைச் சரியாகப் பங்கிட்டு வழங்கவென தமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திரு. தேவராஜாவின் தலைமையில் குழுவொன்று இயங்குவதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org